


அறைவு 02 இயம் 09 October 05 - 11, 2013

# மலைமுரசு
# MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை : 25.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

## கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு முதலிடம்

நொஸ்கானூர் முகமட் நிஹறார்



189 புள்ளிகள்-சண்முகா இந்து மகளிர் கல்லூரி-திருகோணமலை

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து புள்ளிகள் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அதி கூடிய புள்ளிகளான 193 புள்ளிகளை மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரியின் முரளீதரன் கவிலாஸ்ணா வென்றுள்ளார். இரண்டாவது மாவட்ட நிலையை அம்பாறை தட்டிச் சென்றுள்ளது. அம்மாவட்டத்தின் சம்மாந்துறை வலய முஸ்லிம் மகளிர் வித்தியாலய மாணவன் அப் பேற்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார். அப்துல் றஹீம் முகமட் சிஹானுள் என்ற சம்மாந்துறை மகளிர் வித்தியாலய மாணவனே 190 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் இடத்தையும் மாகாணத்தில் இரண்டாம்

15

முகமட் சிஹானுள்



190 புள்ளிகள் - மகளிர் வித்தியாலயம் - சம்மாந்துறை

முரளீதரன் கவிலாஸ்ணா



193 புள்ளிகள் - வின்சென்ட் மகளிர் கல்லூரி - மட்டக்களப்பு

# மீண்டும் பேரம் பேசப்படும் சம்பூர்

பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றுவதா? இல்லையா? என்ற முடிவை தற்போது வரை வெளியிடாதுள்ள இந்தியா, அதனைத் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தி இலங்கையுடன் பேரம் பேசுவதாக தெரிகின்றது.

அப் பேரம்பேசுதலில் முக்கிய மூன்று விடயங்கள் உள்ளடங்கியிருப்பதாகவும் அதனில் ஒரு விடயமாக திருகோணமலையின் சம்பூர் மின் நிலையப் பணிகள் இருக்கின்றது எனவும் நம்பத்தகு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பூர் பிரதேசத்தில் மக்களின் வாழ்வாதாரக்

15

## முன்னாள் அமைச்சரின் நடுகற்பிரதேசம் தோண்டப்படுகின்றது

முன்னாள் தமிழ் அமைச்சரான அமரர் கெ.டபிள்யூ. தேவநாயம் அவர்களின் குடும்ப மயானத்தை விசேட அதிரடிப்படையினர் தோண்டி வருவதாக அங்கிருநது கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இத் தோண்டல் நடைபெறுவதாகவும் அத் தகவலின் படி ஆயுதங்களும், வெடிப் பொருட்களும், பணமும் அம் மயானப் பகுதியில் புதைத்து வைக்கப் பட்டிருக்கலாம் எனத்

15

## ஐயனார்கேணி கொலை வழக்கு

### 3வது சந்தேக நபராக மனைவி

### 2வது சந்தேக நபருக்கு பிணை

ஐயனார்கேணியில் வைத்துக் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட ஈஸ்வரதாசன் கேதீஸ்வரனின் கொலை வழக்கில் மூன்றாவது சந்தேகநபராக அவரது மனையிவின் பெயர் சட்டப்படி இணைக்கப்பட்டுள்ளது. எனினும் வெளிநாடொன்றில் வாழும் அவர் தற்போது வரை நீதிமன்றத்திற்குச்

15



## நுண்கடனைக் கட்ட பாலியல் கையூட்டு..

### மட்டு ஒன்றியத் தலைவர் குற்றச்சாட்டு

சுயதொழில் நுண் கடனைப் பெற்றுக் கொண்டுள்ள வறிய மக்கள் தமது தவணைப் பணத்தைச் செலுத்தக் தாமதிக்கும் போது அவ்வந் நிறுவன அதிகாரிகள் அக் காலதாமதத்தை ஈடுசெய்யப் பெண்களிடம் பாலியல்க் கையூட்டைப் பெற முயற்சிப்பதாக மட்டக்களப்பு மாவட்ட இணையங்களின் தலைவர் திரு. கமலதாஸ் தெரிவித்துள்ளார்.

15

## புல்மோட்டையில் உருவாகும் "ரணவிரு"

### அன்வர், தௌபீக் நேரடி பயணம்

புல்மோட்டையில் உருவாகி வரும் இராணுவத்திருக்கு உரிய கிராமமான ரணவிரு கிராமத்தினை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் மற்றும் மாகாணசபை உறுப்பினர் அன்வர் ஆகியோர் நேரில் சென்ற பார்வையிட்டுள்ளனர்.

ஏற்கனவே இப் பிரதேசத்தில் பூஜா பூமி, மற்றும் தொல்பொருட் துறையினரின் நடவடிக்கைகளுக்காகக் காணி அளவீடு செய்ய அரசு முனைந்த போது ஏற்பட்ட பதட்டமான சூழலை அடுத்து அவ்விடயம் நீதிமன்றத்திலுள்ளது.

தற்போது அதே பகுதியில் சுமார் 60 ஏக்கர் காணியில் இவ் இராணுவக்....

15

## கன்னியாவில் புதிதாய் புத்தர் சிலைகள்

### "நிறுத்துங்கள்" - யோகேஸ்வரன் நா.உ



திருகோணமலை, மாவட்டத்தின் கன்னியாவில் உள்ள தனியார் காணியில் புத்த விகாரை அமைப்பதை தடுத்து நிறுத்துமாறுகோரி திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு இந்து இளைஞர் பேரவை தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழல் பிரதேசத்தில் இந்துக்களின் புனித வழிபாட்டுத் தலமும், தீர்த்தமுமாக இருந்த கன்னியா வெந்நீர் ஊற்றில் திட்டமிட்டு அமைக்கப்பட்ட பௌத்த விகாரையை [illegible] அருகில் உள்ள (400 மீற்றருக்கு அப்பால்) தனியார் காணியில் தர்மம் பெற்று வாழ்ந்த பிக்குவால் மூன்று புத்தர் சிலைகள் தாபிக்கப்படவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளன.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### தனி 'நாயகனாய்' தனிநாயகம் அடிகள் !

தனி நாயகனாய் உலகெங்கும் தமிழ்த் தூது சென்ற தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா திருமலையில் நிறைவுற்றுள்ளது.

ஒரு நூறு ஆண்டு காலத்திற்கு முன்னராகவே பிறந்த அந்த மகான் தனிச் சிங்களச் சட்டத்தின் உருவாக்கத்தின் போது அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்காவுடன் பேச்சுக்களை நடாத்தி பல நாடுகளில் நூற்றுக்கணக்கான இனக்குழுக்கள் எவ்வாறு சமத்துவத்துடன் வாழ்கின்றன என எடுத்துக்காட்டி, அவ்வாறே இலங்கையிலும் வாழ முடியும் என வாதிட்ட போது அவருக்கு அன்றைய இலங்கைப் பிரதமர் வழங்கிய பதில் "இதற்கான தீர்வை வாளினால் தான் பெற்றுக்கொள்ள முடியும்" என்பதாக இருந்தது.

தெளிவாக அவர்கள் தமது பாதையைச் செப்பனிட்டு இன்று வாளினால் பதிலளித்தும் விட்டார்கள். நாமும் நமது அரசியல் தலைமைகளும் காலத்திற்குக் காலம் எமது இலக்குகளை மாற்றிக் கொண்டு எந்த இலக்கையும் அடையாமல் பயணித்துக்கொண்டு இருக்கின்றோம்.

அதற்கு மிகப் பொருத்தமான உதாரணம் ஒரு காலத்தில் போதுமான அதிகாரங்களுடன் எமது கைகளுக்குக் கிடைத்த மாகாண சபை ஆட்சியை வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிய நாம் இன்று அதிகாரங்கள் குறைக்கப் பட்ட மாகாண சபையில் பெரும் வெற்றியடைந்ததையிட்டு மிகப் பெருமை கொள்கின்றோம்.

இவ்விடயம் எமக்குக் கற்பிக்கும் பாடம் என்ன? நாம் நிலையான நோக்கினை எமக்காக இன்னும் நிர்ணயிக்கவில்லை என்பதே.

ஒரு நோக்கினை நிர்ணயித்த பின்னர் அதனை அடைவதற்குப் பல இலக்குகளை விழுத்த வேண்டியிருக்கும்.

இதனைச் சாதாரணமாக விளக்குவதென்றால் குருசேத்திரப் போரில் வெல்வதே பாண்டவர்களின் நோக்காக இருந்தது. அந் நோக்கினை அடைவதற்காகப் போருக்கு முன்னரே இலக்குகளாக கர்ணனையும், விதுரனையும் தகர்த்துவிட்ட பாண்டவர்கள், போரில் பீஷ்மரையும், துரோணரையும் இலக்காகக் கொண்டு தகர்த்து தமது வெற்றியென்ற நோக்கை அடைந்தார்கள்.

நாம் எமது நோக்கத்தை முன்னரே தீர்மானித்திருக்க வேண்டும்.

தனிநாயகம் அடிகளார் மொழியை தனது நோக்காகக் கொண்டார். நிலத்தைக் காப்பதற்காக மக்கள் திரளத் தொடங்கிய போது தமிழ் மொழியைக் காப்பாற்ற தனது ஆளுமையைச் செலவிட்டார். அவர் அந் நோக்கை அடைவதற்காக பல இலக்குகளை நிர்ணயித்தார். தமிழாராய்ச்சி மாநாடு அவற்றுள் ஒன்று.

எமக்கு இப்போதுவரைக்கும் நோக்கு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. தனிநாயகனே.... இன்று நாம் மொழிக்காகவும் நிலத்திற்காகவும் வாழ்வுக்காகவும் இலக்கின்றித் தவித்துக் கிடக்கின்றோம்... நின் மீள் பிறப்பென்பது எப்போது...

## பிர்தொஸ் சிறுவர் பாடசாலையில் சிறுவர் தினம்


(எம்.ரீ.எம்.பர்ஹான்-சம்மாந்துறை)

சம்மாந்துறை மூன்றாம் பிரிவில் இயங்கும் பிர்தௌஸ் ஆங்கில பாலர் பாடசாலை மற்றும் சம்மாந்துறை உடங்கா ஒன்றில் இயங்கும் பிர்தொஸ் பாலர் பாடசாலையும் இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் தின நிகழ்வு பாலர் பாடசாலை பணிப்பாளரும் பிறை எப் எம் அறிவிப்பாளருமான ஏ.சீ நெவ்ஷாத் தலைமையில் சம்மாந்துறை சிறுவர் பூங்காவில் 2013.10.01 இடம் பெற்றது இந் நிகழ்வில் இளைஞர் பாரளுமன்ற உறுப்பினரும் ஆயுள் வேத மருத்துவ மாணவருமான ஏ.ஆர்.அஸ்ஸாம் உட்பட ஆசிரியர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். மேலும் மாணவர்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் இயங்கும் சிறுவர் பிரிவுக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு பல விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





## பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தடை

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் பல்கலைக்கழத்திற்குள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. பிரயோக விஞ்ஞான பீடத்தில் இன்று காலை இரு மாணவ குழுக்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையை அடுத்து அங்கு பதற்றமான நிலைமையும் ஏற்பட்டது. இவற்றை கருத்தில் கொண்டே மறு அறிவித்தல் வரை பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக நிர்வாகம் அறிவித்துள்ளது.

## மூதூர் சண்பகவல்லி வித்தியாலயம் 33 வருடங்களின் பின் சாதனை



இவ்வருடம் புலமைப்பரீட்சையில் மூதூர் பிரதேசத்தில் தங்கநகர் கிராமத்தில் அமைந்துள்ள சண்பகவல்லிவித்தியாலய மாணவர்கள் மூவர் சித்தியடைந்துள்ளனர்.

இக்கிராமம் மூதூர் பிரதேசத்தில் மிகவும் பொருளாதார ரீதியிலும் கல்வியிலும் பாதிப்படைந்துள்ள ஓர் கிராமமாகும். யுத்தப் பாதிப்புக்குள்ளாகி வறுமையில் இருக்கும் இக்கிராமத்தின் பாடசாலையில் இவ்வருடம்தான் 9 தரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் செல்வி . கா.ஜதுர்சனா எனும் மாணவி 152 புள்ளிகளை 32 வருடங்களின் பின் பெற்று தனித்து நின்று பாடசாலைக்கு பெருமை சேர்த்திருந்தார்.

அதிபரினதும் ஆசிரியர்களினதும் தன்னலமற்ற சேவையினால் இவ்வருடம் இப்பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக ர.சோபிதா (162) பு.சனுஜா (161) கோ.கவிப்பிரியன் (159) ஆகிய மூவரும் சித்தியடைந்து சாதனை செய்துள்ளனர். (மதன்)

## மாலையில் கடைக்குச் சென்றவர் சடலமாக மீட்பு



திருகோணமலை நொச்சிக்குளம் மாதுளாவை பகுதியில் சோமநாதன் சத்தியசீலன் (வயது 17) என்பவர் கடைக்குச் செல்வதாக கூறிவிட்டு வீட்டில் இருந்து சென்றவர் மறுநாள் மாலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கந்தசாமி சோமநாதன் (வயது 45) சோ.பராசக்தி (வயது 35) ஆகியோரின் மூத்த மகனான சோ. சத்தியசீலன் என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சம்பவத்தன்று வழமைபோல அவர் தோட்ட வேலையை முடித்து விட்டு வீடு திரும்பியுள்ளார். குளித்துவிட்டுத் தான் கடைக்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டு இரவு 7.30 மணியளவில் வெளியே சென்றவர் வீடு திரும்பவே இல்லை.

அவரது நண்பர்களிடம் பெற்றோர் விசாரித்துப் பார்த்தும் எதுவிதமான தகவல்களும் கிடைக்கப்பெறாத பட்சத்தில் காவல் துறையினரிடம் சென்று புகார் அளித்துள்ளனர். மறுநாள் காலை 7.30 மணியளவில் கிராம மக்களும், காவல் துறையினரும் சேர்ந்து தேடிப்பார்த்த போது மாலை 3.30 மணியளவில் நொச்சிக் குளத்தின் காடு நிறைந்த பரப்பில் சத்தியசீலன் சடலமாகக் கிடைத்துள்ளார்.

அவரது மரணத்தின் காரணத்தை அறியும் பொருட்டு திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட அவரின் சடலத்தை குருநாகல வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும், சத்தியசீலனின் நெருங்கிய நண்பர்களாகிய பிரதீப், பிரதீபன், முகிலன் ஆகியோரை காவல் துறையினர் விசாரணைக்கு அழைத்துச் சென்றதாகவும், அம் மூவரில் பிரதீபன் என்பவரை மட்டும் விடுவித்துள்ளதாகவும், மற்றைய இருவரிடமும் காவல் துறையினர் விசாரணையை தொடர்ந்து நடாத்தி வருவதாகவும் சத்தியசீலனின் தந்தை கந்தசாமி சோமநாதன் மலைமுரசிற்கு தெரிவித்தார்

## தேவை

கல்முனையில் இயங்கிவரும் பார்மசி ஒன்றுக்கு "பார்மசிஸ்ட் லைசன்ஸ்" ஒன்று உடனடியாக தேவை
தொடர்பு 07[illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் தினம் – பரிசில்கள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை 8 ஆம் பிரிவு குர்ஆன் மத்ரிசாவில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வின் போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட கவிஞர் முக்கணி அலிஸா வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு பணப் பரிசில் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (பைஷல் இஸ்மைல்)



## தேசிய மட்டப் போட்டிகளில் இந்துக் கல்லூரி சாதனை

(கதிரவன்)

கல்வி அமைச்சு நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் கொழும்பு சுகததாசா மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டிகளில் திருமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் அமிர்தகுலசிங்கம் கோகுலன் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான குண்டு போடுதல் நிகழ்வில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளார்

## பாரதிபுரத்தில் சிறுவர் தினம்

சர்வதேச சிறுவர் தினத்தை மூதூர் பாரதிபுரம் குருமார் சங்கம் விழுது மேம்பாட்டு மையத்துடன் இணைந்து பாரதிபுரத்தில் சிறப்பாக கொண்டாடியுள்ளது.

பாரதி சிறுவர் விழா எனப் பெயரிடப்பட்ட இச் சிறுவர் தின விழா கடந்த 02ம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை கொண்டாடப்பட்டுள்ளது. இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ இ. பாஸ்கரன் குருக்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் பாரதி முன்பள்ளிப் பாடசாலை தொடர்பாகப் பல தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டுள்ளன. பாடசாலையின் செல்வழி வீதியைத் திருத்துதல், முன்பள்ளி ஆசிரியர்களை ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல், பாடசாலைக்குப் பெயர்ப் பலகையை பொருத்துதல், மின்சார இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், நீர்த் தாங்கியை அமைத்தல், முதலுதவிப் பெட்டியொன்றைப் பொருத்துதல், ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவைச் சரியாக ஒழுங்கு படுத்துதல் போன்ற தீர்மானங்களே அவையாகும்.

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களின் விழிப்புணர்வு



திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வு கடந்த 01.10.2013 அன்று காலை 07.30 மணிக்கு திருகோணமல பிரதான பஸ் நிலையத்திலிருந்து பிரதேச செயலகம் வரை ஊர்வலமாக சுமார் 600 பாடசாலை மாணவர்கள் சிறுவர் வழிப்புணர்வு தொடர்பான பதாதைகள் வீதி நாடகங்கள் தாளலய நாடகங்கள் போன்ற நிகழ்வுகளுடன் நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் (அ.மதன்)

**தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வாழ்ந்ததாகக் கருதப்படும் நிலக்கீழ் இல்லம் முல்லைத்தீவில் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்விடம் பிரபல்யமான சுற்றுலாத்தளமாக இருந்தமை குறிப்பிடத் தக்கது.**

# இலங்கையில் தமிழ் பௌத்தம் 01

திருகோணமலை நகரத்தில் இருந்து வவுனியா செல்லும் பாதையில் கன்னியா வென்னீரூற்றைத் தாண்டி வரும் பெரியகுளம் பகுதி வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பிரதேசமாகும். இங்கு வெல்கம் விகாரை அமைந்திருக்கிறது. வெல்கம் விகாரை என்னும் இந்தப் பௌத்தப் பள்ளி திராவிடக் கலைப்பாணியில் அமைந்த ஒரேயொரு "தமிழ் பௌத்த பள்ளியாகும்". இதன் இன்னொரு பெயர் நாதனார் கோவில் என்பதாகும்.

சோழருடைய ஆட்சியின் கீழ் திருகோணமலை வந்தபின் இதன் பெயர் இராசராசப் பெரும் பள்ளி என சோழ ஆட்சியாளர்களால் மாற்றப்பட்டிருக்கிறது. இங்கு 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 16 தமிழ் அறக்கொடைச் சாசனங்கள் 1929, 1953 தொல்பொருள் ஆய்வின் போது கிடைக்கப்பெற்றன.

இவ் விகாரை தமிழ் பௌத்த துறவிகளால் நிர்மானிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டதோடு அதற்கு தானம் வளங்கியவர்களும் அயலில் வாழ்ந்தவர்களும் பொலநறுவைக்கால தமிழ் பௌத்தர்கள் என்பதனை சாசன ஆதாரங்கள் உறுதிப்படுத்துகிறது. அத்துடன் சோழ ஆட்சியாளர்களால் இவ்விகாரை பாதுகாக்கப்பட்டு, ஆதரவளிக்கப்பட்டதுடன் வெல்காமம் என்னும் ஈழமண்டலத்தின் இராஜேந்திரசிங்க வளநாட்டில் இவ்விகாரை அமைந்திருந்ததால் வெல்காமப்பள்ளி என்றும் அழைக்கப்பட்டது.



எனவே இன்று இலங்கையில் வடகிழக்குப் பகுதியில் காணப்படும் புராதன பௌத்த விகாரைகள் தொடர்பான புரிதலுக்கு இலங்கையில் "தமிழ் பௌத்தம்" பற்றிய ஆராய்வு அவசியமாகிறது.

இலங்கையில் "தமிழ் பௌத்தம்" பௌத்தம் (Buddhism, புத்த தருமம்) என்பது கிமு 566 - 486 இல் வட இந்தியாவில்புத்தரின் போதனைகளின் அடிப்படையிலான ஒரு சமய தத்துவமாகும்.

| | | |
|---|---|---|
| நற்காட்சி | - | Right View |
| நல்லெண்ணம் | - | Right Thought |
| நன்மொழி | - | Right Speech |
| நற்செய்கை | - | Right Conduct |
| நல்வாழ்க்கை | - | Right Livelihood |
| நன்முயற்சி | - | Right Effort |
| நற்கடைப்பிடி | - | Right Mindfulness |
| நற்தியானம் | - | Right Meditation |

போன்ற எட்டு நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட பௌத்தம் தற்போது உலகில் ஏறத்தாழ 350 மில்லியன் மக்களால் பின்பற்றப்படுகிறது. இந்தியாவில் தோன்றிய பௌத்தம் பின்னர் படிப்படியாக மத்திய ஆசியா, இலங்கை, திபெத், தென்கிழக்கு ஆசியா மற்றும் கிழக்காசிய நாடுகளாகிய சீனா, வியட்நாம், ஜப்பான், கொரியா, மங்கோலியா ஆகிய நாடுகளுக்கும் பரவியது.

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் அசோக மன்னரும் அவரது உறவினராகிய மகிந்தர் (மகேந்திரரும்) மற்றும் அவரைச் சேர்ந்த பிக்குகளாலும் பௌத்தம் தமிழ்நாட்டில் பரப்பப்பட்டது. பண்டைக்காலத்தில் பௌத்தமதம் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்தபோது அது அரச ஆதரவைப் பெற்றிருந்ததோடு தமிழ் இலக்கியத்திலும் பெரும் செல்வாக்கு செலுத்தி இருந்தது. அக்காலத்தில் தமிழ்பௌத்தர்களால் பல நூல்கள் இயற்றப்பட்டன.

1. மணிமேகலை - மதுரைக் கூலவாணிகர் சீத்தலைச் சாத்தனார்



2. வீரசோழியம் - புத்தமித்திரனார்
3. குண்டலகேசி - நாதகுத்தனார்
4. சித்தாந்தத் தொகை- ?
5. திருப்பதிகம் - ?
6. விம்பசார கதை - ?

தமிழ்நாட்டில் பௌத்த மத வீழ்ச்சிக்குப் பிறகு மேற்குறித்த பௌத்த நூல்களில் இலக்கியத்தில் (மணிமேகலை) ஒன்றும் இலக்கணத்தில் ஒன்றும் (வீரசோழியம்) ஆக இரண்டு நூல்களே தற்போது முழுநூலாக எஞ்சி நிற்கின்றன.

தமிழ்நாட்டில் பௌத்த சங்கத்தின் அங்கத்தினரான தேரர்கள் நாடெங்குஞ் சென்று பௌத்த கொள்கையைப் பரவச் செய்தனர். அவர்கள் தமது மதக் கொள்கையைப் போதிப்பதையே தமது வாழ்நாட்களின் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

அரசர், வணிகர், செல்வந்தர் முதலானவர்களின் ஆதரவுடன் விகாரைகளையும், பள்ளிகளையும், சேதியங்களையும்(வழிபாட்டு இடம்), நிறுவினர். அத்துடன் இலவச மருத்துவம், இலவச கல்வி மற்றும் ஏழைகளுக்கு உணவு கொடுத்துதவுதல், அங்கவீனர்களுக்கு உதவுதல் என்பவற்றுக்கூடாகவும் மக்களுக்கு மதபோதனைகளை எடுத்துச் சென்றனர்.

இதனால் சாதிப்பாகுபாட்டினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களை பெருமளவில் கொண்டிருந்த தமிழ்நாட்டில் பௌத்தமதம் மிகவிரைவில் பிரபலமானது. இதன் செல்வாக்குப் பற்றிய விபரங்களை நாம் சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், நாலாயிரப்பிரபந்தம், பெரியபுராணம், நீலகேசி முதலிய நூல்களினால் அறியக்கூடியதாக இருக்கிறது.

(தொடரும்....)

*- வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் -*

ஆதாரங்கள்

1. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - பேராசிரியர்.சி.பத்மநாதன்.2006.
2. பௌத்தமும் தமிழும் - மயிலை திரு.சீனி. வேங்கடசாமி (1900-1980)
3. இராசராசப் பெரும் பள்ளி / வெல்கம் விகாரை - புகைப்படங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அதிகரிக்கப் போகும் அழுத்தங்கள்

அரசாங்கம் விரும்பாவிட்டாலும், இலங்கைப் பிரச்சினை ஒரு சர்வதேச விவகாரமாக மாற்றம் பெற்றுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், வன்னியில் போர் உச்சக்கட்டத்தை எட்டியிருந்த போது, உலகின் கவனம் இலங்கை மீது ஒன்று குவிந்திருந்தது. அதற்குப் பிந்திய காலகட்டத்தில், அவ்வப்போது மனிதஉரிமை மீறல்கள் விவகாரங்களினால், உலகின் கவனம் இலங்கை மீது திரும்பினாலும், எல்லாத் திசைகளிலும் அது எதிரொலித்திருக்கவில்லை.

ஆனால், இப்போது இலங்கை விவகாரம் ஒரு சர்வதேச விவகாரமாக, உலகநாடுகள் மத்தியில் பேசப்படும் நிலை உருவாகியுள்ளது. நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம், அதையடுத்து அவர் ஜெனிவாவில் சமர்ப்பித்த அறிக்கை, ஐ.நா பொதுச்சபைக் கூட்டம், வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்மக்கள் அளித்துள்ள தீர்ப்பு, எல்லாமே இலங்கை விவகாரத்தை சர்வதேச மயப்படுத்தியுள்ளன.

இது உள்நாட்டு விவகாரம், வெளிநாடுகள் தலையிடவோ கருத்துகளை வெளியிடவோ கூடாது என்று இலங்கை அரசாங்கம் கூறினாலும், தவிர்க்க முடியாமல், இலங்கை அரசாங்கம் சர்வதேச அரங்கில் தன்னை நியாயப்படுத்தியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

சர்வதேச அரங்கில் தனக்கு ஆதரவான சூழலை உருவாக்குவதற்காக பல்வேறு நாடுகளுடன் புதிதாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி, இலங்கையின் நிலைமைகளை எடுத்துக் கூறி, இந்த விவகாரத்தை சர்வதேச மயப்படுத்துவதில் இலங்கைக்கும் கணிசமான பங்குள்ளது.

ஒரு பக்கத்தில், உள்நாட்டு விவகாரத்தை சர்வதேச மயப்படுத்துவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் பிற தரப்பினர் மீதும் குற்றம்சாட்டும் இலங்கை அரசாங்கமே, மறுபுறத்தில் தானும் அதேபோல சர்வதேச மயப்படுத்தி வந்துள்ளது.

இத்தகைய சூழலில், கொமன்வெல்த், ஐ.நா பொதுச்சபை, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை, அணிசேரா நாடுகள் அமைப்பு என்று இலங்கை அரசாங்கம் அங்கம் வகிக்கும் சர்வதேச மன்றங்களிலெல்லாம், இலங்கை விவகாரம் அதிகம் பேசப்படும் ஒன்றாக மாறியுள்ளது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தியதன் மூலம், அங்கு மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தி விட்டதாக அறிவித்து, தனக்குச் சாதகமான சூழலை உருவாக்க இலங்கை அரசாங்கம் முயன்ற போதிலும், அது பெருமளவில் பயனளிக்கவில்லை. ஏனென்றால், இலங்கையில் போருக்குப் பிந்திய சூழலை உலகம் எவ்வாறு கவலையுடன் நோக்கியதோ, அதுபோலவே, வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப் பிந்திய சூழலையும் உலகம் உன்னிப்புடன் அவதானித்து வருகிறது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதை மட்டும் உலகம் அக்கறை செலுத்தவில்லை. அதன் ஊடாக, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சூழல் உருவாகுமா என்பதே சர்வதேச சமூகத்தின் கவலையாக உள்ளது. அதுதான் இறுதியான அமைதியை உருவாக்குவதற்கான அடித்தளமாக இருக்கும் என்று உலகம் நம்புகிறது.

இதனால், வடக்கு மாகாணசபையின் நிர்வாகம், சிக்கலின்றி இயங்க வேண்டும் என்று வெளிநாடுகளும், சர்வதேச அமைப்புகளும் கவலை கொண்டுள்ளதில் ஆச்சரியமில்லை.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, நியுயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனைச் சந்தித்திருந்தார். வடக்கு மாகாணசபைக்கு வெற்றிகரமாகத் தேர்தலை நடத்தி விட்டோம் என்று பெருமிதப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், வடக்கு மாகாணசபைக்கான நிதி ஒதுக்கீடுகள் எவ்வாறு இருக்கும் என்று ஐ.நா பொதுச்செயலர் பான் கி மூன் கேள்வி எழுப்பியதாகத் தகவல்.

உரிய நடைமுறைகளின்படி மாகாணசபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாகாணசபைக்கான அதிகாரங்கள் குறித்தும், வடக்கு மாகாணசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் சென்றுள்ளதால் இலங்கை அரசாங்கத்தினால் வஞ்சிக்கப்படுமா என்றும் சர்வதேச சமூகம் அஞ்சுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் எழுப்பிய கேள்வி, இதனைத் தான் வெளிப்படுத்துகின்றது. பான் கீ மூனிடம் மட்டுமன்றி, அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளிடமும் இதே சந்தேகமும் கேள்வியும் இருக்கிறது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்னர், இந்த நாடுகள் வெளியிட்ட தனித்தனியான அறிக்கைகள், மற்றும் கருத்துகளில் அந்தப் பயம் எதிரொலித்ததைக் காணலாம்.

மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்றும், வடக்கு மாகாணசபையில் தமிழ்த் 'தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் இந்த நாடுகள் வலியுறுத்தியிருந்தன.

ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் வெளியிட்ட அறிக்கையிலும் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், குறிப்பாக வடக்கு மாகாணசபையுடன் அரசாங்கம் இணைந்து செயற்படுவதன் மூலமே, இலங்கையில் அமைதிக்கான கதவுகளை திறக்க வைக்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கையின் வெளிப்பாடு தான் அது. மாகாணசபைக்கான போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு, தமிழ் மக்கள் அந்த அதிகாரங்கள் குறித்து திருப்தி கொள்ள வேண்டும் என்றும், அதன் மூலமே, இனங்களுக்கு இடையில் தோன்றிய பகைமை கொஞ்சம் கொஞ்சமாக குறையும் என்ற சர்வதேச சமூகத்தின் நம்பிக்கைக்கு ஏற்ற சூழல் இலங்கையில் நிலவுவதாகத் தெரியவில்லை.

இதற்கு இரண்டு தரப்புகள் காரணமாக உள்ளன.

முதலாவது, தென்னிலங்கையில் உள்ள சிங்களத் தேசியவாத சக்திகள். இரண்டாவது, அரசாங்கம்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதுமே, அதை நாட்டைப் பிரிப்பதற்கான நடவடிக்கையாக சித்திரித்து, சிங்களத் தேசியவாத சக்திகள் பிரசாரம் செய்யத் தொடங்கின. வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதுமே, இந்த தேசியவாத சக்திகளின் பிரசாரங்கள் இன்னும் மோசமடைந்துள்ளன.

வடக்கு மாகாணசபையை வைத்து, தனிநாட்டை அமைத்து விடப் போகிறார்கள் என்ற தேவையற்ற பீதியை தெற்கிலுள்ள சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கும் முயற்சிகளுக்கு அரசாங்கமும் துணைபோயுள்ளது.

இது போருக்குப் பின்னர், இரு இனங்களிடையேயும், இணக்கமான நம்பிக்கையான சூழலைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமான தடையாக அமைந்துள்ளது.

சிங்களத் தேசியவாத சக்திகளின் இத்தகைய பிரசாரங்கள் இன்னும் மோசமடைந்தால், ஒருகட்டத்தில், மாகாணசபையின்



அதிகாரங்களை இன்னும் குறைக்க வேண்டும் என்ற சிங்கள மக்களின் அழுத்தங்கள் அரசாங்கத்துக்கு அதிகரிக்கும். அது இன முரண்பாடுகளை இன்னும் தீவிரப்படுத்தும்.

அடுத்து, மாகாணசபைகளுக்கு முக்கியமான அதிகாரங்கள் எதையும் வழங்க முடியாது, வரையறுக்கப்பட்ட அதிகாரங்களையே வழங்க முடியும் என்று அரசாங்கம் இறுக்கமான நிலைப்பாட்டில் உள்ளது. இதனால், தேர்தலுக்கு முன்னரே காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் தொடங்கி விட்டன. இன்னமும் இந்த சர்ச்சைகள் ஓய்ந்தபாடில்லை.

இத்தகைய சூழலில், அரசாங்கம் தொடுத்திருந்த மேல்முறையீட்டு வழக்கு ஒன்றில், 13ஆவது திருத்தச்சட்டத்தின்படி, காணி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு கிடையாது என்ற தீர்ப்பை உயர்நீதிமன்றம் அளித்துள்ளது.

இது காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்க முடியாது என்ற வரட்டுப் பிடிவாதத்தில் உள்ள அரசாங்கத்துக்கு சட்டரீதியாக கிடைத்துள்ள ஒரு பெரும் வெற்றி மட்டுமல்ல, பலமும் கூடத் தான். இந்த தீர்ப்பை வைத்துக் கொண்டே, இந்தியாவின் நெருக்குதல்களை அரசாங்கத்தினால் சமாளிக்க முடியும். சர்வதேச சமூகத்துக்கும் பதிலளிக்க முடியும்.

ஆனால் காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய - வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு தீர்வைத் தான் இந்தியா, 1987இல் பரிந்துரை செய்தது. அதற்கமையவே, 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டன.

இப்போது, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை பிரித்து விட்ட உயர்நீதிமன்றம், மாகாணசபைகளுக்கு காணி அதிகாரங்கள் கிடையாது என்றும் கைவிரித்து விட்டது. ஆக, 1987இல், இந்திய - இலங்கை உடன்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபைத் தீர்வு முறை, மிகவும் பலவீனப்படுத்தப்பட்டுள்ள ஒரு சூழலிலேயே, வடக்கு மாகாணசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறி, வடக்கு மாகாணசபையை நிர்வகிப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சிக்கலானதாகவே இருக்கும். இது, தமிழ் மக்களிடையே அதிருப்தியையும் அதிகாரமற்றதொரு தீர்வுக்குள் தாம் தள்ளப்பட்டு விட்டதான வெறுப்பையும் ஏற்படுத்தும்.

இந்த அதிருப்தியும் வெறுப்பும் ஏற்பட்டு விட்டால், நீறுபூத்த நெருப்பாக உள்ள, பழைய காயங்களில் சீழ்வடியத் தொடங்கும் என்பது சர்வதேச சமூகத்துக்கு நன்கு தெரியும். எனவே மாகாணசபையை பலப்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஏற்பட்டுள்ளது.

ஜனநாயகத்தில் உயர்நீதின்றம் ஒன்றின் தீர்ப்பு இறுதியானதல்ல. நாடாளுமன்றமே உச்ச அதிகாரம் படைத்தது, இறைமை கொண்டது என்று, முன்னாள் தலைமை நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க விவகாரத்தின் போது, அரசாங்கமே கூறியுள்ளது.

எனவே, மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் தடையாக அமைய முடியாது. அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்திலும் போதிய பலம் உள்ள நிலையில், மாகாணசபைகளுக்கான அதிகாரப் பகிர்வை தட்டிக்கழிக்கவும் முடியாது.

மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதன் மூலம், இலங்கையில் அதிகாரப்பகிர்வுப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படுவதையே சர்வதேச சமூகம் விரும்பும். அடுத்தவாரம், கொழும்பு வரும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இதற்கான பேச்சுக்களை தொடங்குவார் என்று எதிர்பார்க்கலாம்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடனான சந்திப்பின் போது, ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் இலங்கை விவகாரம் குறித்தும் பேசியுள்ளார். இதன் மூலம், சர்வதேச தலைவர்களின் சந்திப்புகளில், பேசப்படும் விவகாரங்களில் ஒன்றாக, இலங்கை விவகாரம் மாற்றமடைந்துள்ளது.

உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடக் கூடாது என்ற கொள்கையில் இருக்கும் அரசாங்கத்துக்கு இது மற்றொரு எச்சரிக்கை. இந்தக்கட்டத்தில் அதிகாரப்பகிர்வு விடயத்தில் அரசாங்கம் தீர்க்கமான முடிவுகளை எடுக்கத் தவறினால், இலங்கைப் பிரச்சினை, இன்னும் அதிகளவுக்கு சர்வதேச மயப்படும் நிலை ஏற்படலாம்.

**கே. சஞ்சயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறையில் 4 மில்லியன் ரூபாய் செலவில் வீதி புனரமைப்பு

(எம்.ரீ.எம்.பர்ஹான்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் புற நெகும வேலைத்திட்டத்தின் கீழ் சம்மாந்துறை கல்லரச்சல் பகுதியில் நான்கு மில்லியன் ரூபாய் செலவில் வடிகான்கள் மற்றும் கொங்ரீட் வீதி அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம் பெற்று வருகின்றது.

இதே வேளை அப் பகுதியில் பலகாலமாகப் புனரமைக்கப்படாத வீதிகளும் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரிம் வேண்டுகோளுக்கிணங்க துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சின் நிதியில் இருந்து கொங்ரீட் கல் வீதியாக புனரமைக்கப்பட்டு பொது மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.




## ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய நவராத்திரி விழா.

ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய நவராத்திரி விழா எதிர்வரும் 05.10.2013 அன்று ஆரம்பமாகி 15.10.2013 அன்று குளிர்த்தியுடன் நிறைவடைகின்றது.

ஆலடி விநாயகர் தேவஸ்தானத்திலிருந்து அம்பாளுடைய கொழுக்கரகம் 5.10.2013 காலை 7.30 மணிக்கு எடுத்து வரப்படும் எனவும், மாலைப் பூசை தொடங்கும் முன் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பட்டு எடுத்து வரப்பட்டு பூசைகள் இடம்பெறும் எனவும் இவ்வாலய பூஜைகளை செல்வராஜா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14.10.2013 அன்று தம்ப ஊர்வலமும் நடைபெறவுள்ளது. அபிஷேகம் காலை 8.00, காலை பூசை - 10 மணிக்கும், மாலை பூசை 5.30 மணிக்கும் இடம்பெறும் (ஆலய தர்மகர்த்தா - கெங்காலிங்கம் , சரவணப்பிரபு.)

## பெருந்தெரு விக்னேஸ்வராவில் 6 மாணவர்கள் சித்தி

தி/ பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இவ்வருடம் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். கே. றிவ்னாஸ் (174), எஸ். உதயாஸ்(165), எம். யுரேக்கா(163), எஸ்.உமாசுதன்(157), என்.சஞ்சிகா(156), ஏ. வர்ஷன்(154)

## அன்புவழிபுரம் கலைமகள் வித்திாயலயத்தில் நால்வர் சித்தி

நடந்து முடிந்த புலமைப் பரிசிற் பரீட்சையில் அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலய மாணவர்கள் நால்வர் சித்தியடைந்துள்ளனர். வே.லக்சியா (158), ஞா.நிதர்சனா(158), ஜெ.கிருஸாந்தன் (153), பி.கிவாஷன் (152) ஆகியோரே அந் நால்வருமாவர். இவர்களுக்கு திருமதி .த. விக்னேஷ், திருமதி.வி.ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோர் கற்பித்திருந்தனர்.



## பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

தனியார் பல்கலைக்கழகங்களை சட்டவரைமுறைக்குள் கொண்டு வரும் வர்த்தமானி அறிவித்தலை அகற்ற வேண்டும் எனக் கோரி ஆயிரக் கணக்கான மாணவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து கண்டி நகரம் வரை நடை பயின்றுள்ளார்கள்.

விசேட வர்த்தமானி ஊடாக தனியார் பல்கலைக்கழகங்களைச் சட்ட வரைமுறைக்குள் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. அதன் படி அத் தனியார் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படவுள்ள பட்டங்கள் இலங்கையின் பட்டங்களுக்கு நிகராக மாற்றமடையலாம்.

## ஒரு கிலோ மீற்றருக்கு 1.039 பில்லியன் இலஞ்சம்

மாத்தறைக்கும் கதிர்காமத்திற்கும் இடையில் போடப்படவுள்ள தொடரூந்துப் பாதைக்கு ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் இலஞ்சமாக சுமார் 1.04 பில்லியன் ரூபாய்களை ராசபக்ச அரசு பெற்றுக் கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அக்கட்சியின் பேச்சாளர் மங்கல சமரவீர கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு இலஞ்சம் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக நாமல் ராசபக்ச மற்றும் சூதாட்ட வர்த்தகரான தம்மிக்க பெரேரா ஆகியோர் சீனாவிற்குச் சென்று பேசிவிட்டு வந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## எத்தனை காலம் தான்......?

எவருக்கும் தத்தமது வாழ்க்கையில் உயர்ந்து செல்ல வேண்டுமென்ற ஆசை இருப்பதில் எவ்வித தவறுமில்லை ஆனால் அவ்விதம் உயர்வதற்காக நாம் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள் தவறாக இருத்தலாகாது.

இன்று நம் மத்தியில் உயர்ந்துள்ளவர்களை எடுத்துப் பார்த்தால் முடியுமான அளவு தீயவழியில் உயர்ந்தவர்களும் அதே வழியை பின்பற்றி முறையற்ற வகையில் சொத்து சம்பாதித்தவர்களுமே அதிகமாக காணப்படுகின்றனர்.

ஏழை பணக்காரனாகவும், பணக்காரன் பெரும் செல்வந்தனாகவும், பெரும் செல்வந்தன் இலட்சாதிபதியாகவும், இலட்சாதிபதி கோடீஸ்வரனாகவும் மாறுவதிலேயே அதிக அக்கறை காட்டப்படுகின்றது.

இறைவனின் ஆசீர்வாதத்தினால் அள்ளித் தரப்பட்டவைகள் தாராளம் என எவரும் ஆறுதல் படுவதில்லை. பணவிடயத்தில் மாத்திமல்ல வாழ்க்கையில் முகம்கொடுக்கும் ஏனைய விடயங்களை எடுத்துக் கொண்டாலும் பலர் திருப்தி அடைவதில்லை.

அப்படிப்பட்டவர்களின் மனப்பாங்கு, நோக்கு என்பவை தொடர்பில் எவ்வித நன்மையான மாற்றத்தையும் காணமுடியாது. அளவுக்கு மிஞ்சிய ஆசைகள் எதிர்பார்ப்புக்கள் அவர்களை ஆபத்துக்கு இட்டு செல்லும் வரை மேலும் அவற்றால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் அவர்கள் அறியாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

யாதும் தொழிலொன்றை எடுத்துக்கொண்டால் ஒருவர் அடிமட்டத்திலே இருந்து முன்நோக்கிச் சென்று இருப்பார். சிலர் திடீரென பதவி உயர்வை அடைந்திருப்பார்கள். அவ்விதம் அவர்கள் உயர்ந்து செல்லும் போது வழமையான அவர்களின் நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றத்தையும் நாம் அவதானிக்கத் தவறுவதில்லை.

அவ்வாறு வழமையான குணாதிசையங்கள் மாறும் பொழுது அவரகள் சமூகத்திலிருந்து புறக்கணிக் கப்படுவது மாத்திரமல்ல ஏனையோர்களினது விமர்சனத்திற்கும் ஆளாகுவார்கள்.

ஒரு சிறிய அலுவலகமொன்றில் ஒருவருக்கு அமைய அடிப்படையில் சிற்றூழியர் நியமனம் கிடைத்தது அவரின் சமூகத்தில் அப்படிப்பட்ட பதவியை எவரும் பெற்றிருக்காமையால் அவர் அவரது சமூக, குடும்ப உறுப்பினர்களால் மிகவும் கௌரவிக்கப்பட்டார். அவர் சார்ந்த சமூகத்தில் அவருக்குள்ள ஒரு சாதாரண திறமை கூட மறந்தவர்களிடம் இருந்திருக்கவில்லை.

அதனால் அவர் சார்ந்த சமூகத்தில் அவருக்கென்று ஓர் இடம் தானாகவே ஒதுக்கப்பட்டு அவர் மென் மேலும் உயர்ந்து செல்ல ஆர்வப்படுத்தப்பட்டார். அந்த சமூகத்தின் நல்ல சிந்தனையூடாக பெறப்பட்ட ஆசியினால் அவர் இன்னுமொரு படி உயர்ந்து சென்றார்.

மாவட்ட மட்டத்தில் நல்ல தொரு அந்தஸ்த்தை முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை அவருக்கு பெற்றுக்கொடுத்தது. சிற்றூழியராக கடமையாற்றிய அவர் தற்பொழுது முகாமைத்து உதவியாளராக பதவி உயர்வு பெற்றார். கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற குறித்த பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் சிறப்பான புள்ளிகளை அவர் பெற்றிருந்தார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

மிக குறுகிய காலத்தில் அவர் கண்ட வளர்ச்சி அவரை மாத்திரமல்ல அவர் சார்ந்திருந்த சமூகத்தினையும் பிரமிக்க வைக்கத் தவறவில்லை. அது மாத்திரமல்ல அவரின் உயர் அதிகாரிகள் மத்தியில் அவருக்கு நல்ல செல்வாக்கும் உண்டாகியது. அவ்விதமானவைகள் ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படும் பொழுது " நல்ல நேரம்" "நல்ல அதிஸ்ரம்" என்றெல்லாம் நாம் கூறுவது வழமை. மனிதனுடைய வாழ்க்கையில் துக்கமும் சந்தோசமும் நிலைத்து நிற்பதில்லை அவைகள் மாறி மாறி இடம்பெறுவதால் எமது வாழ்க்கையை அன்றைய மூதாதையர் சக்கரத்திற்கு ஒப்பிட்டுள்ளார்கள்.

ஆனாலும் வாழ்க்கையில் எவ்விதமான மாற்றங்கள் ஏற்பட்டாலும் நாம் நாமாகவே இருக்க வேண்டுமென்பதையும் அன்றைய மூதாதையர்கள் குறிப்பிடத்தவறவில்லை. ஆனால் எம்மில் பலர் அதில் இருந்து

### ...நாட்டு நடப்பு...

தவறியதால்தான் வாழ்க்கையில் சொல்லெண்ணா துயரங்களுக்குள் உட்பட்டு அமைதியற்றவர்களாக வாழவேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சிற்றூழியராக அதுவும் அமைய அடிப்படையில் காலடி எடுத்து வைத்து இன்று நிர்வாகத்தில் ஓர் உத்தியோகத்தராக தடம் பதித்த அவர் பல விடயங்களில் தடம்புரள ஆரம்பித்து விட்டார். அதற்கு முக்கிய காரணமாக இருந்தது. இறுதியாக தோற்றிய பரீட்சைமூலம், அவர் நிர்வாக உத்தியோகத்தராக அண்மையில் தெரிவாகியதே.

ஓர் சாதாரண சிற்றூழியராக இருந்து முகாமைத்துவ ஊழியராக நியமனம் பெற்று இன்று நிர்வாக உத்தியோகத்தராக அவர் திகழ காரணம் அவரின் ஓயாத முயற்சியும் அவருக்குள் இருந்த திறமைகளும் என்பதை விசேடமாக கோடிட்டுக் கூறவேண்டும்.

''கடமையில் மிக கண்டிப்பானவராகவும், பொறுப்பான வராகவும், செயல்பட்டதனால் அவரின் உயர்வு இன்று இந்த அளவுக்கு ஓங்கி நிற்கின்றது." என்று அவரின் உயர் அதிகாரிகள் அவரை மெச்சுவார்கள்.

அவர் படிப்படியாக முன்னேறியதையிட்டு எவருமே பொறாமைப்பட்டதில்லை ஆனால் அவரின் திடீர் மாற்றம் மற்றும் நடவடிக்கைகள் அவரை விமர்சிக்க செய்தன. பலர் அவர் மேல் ஆத்திரப்பட்டனர்.

''Good Morning'' என்று கூறினால் பதிலுக்கு தலையைக் கூட சரிக்காது மிக கர்வமாக அதைப் பொருட்படுத்தாது சென்று கொண்டிருப்பார். அதனால் அவரின் சமூகத்திலிருந்தும் சக உத்தியோகத்தர்கள், நண்பர்கள், ஆகியோரிடமிருந்தும் அவர் ஓரங்கட்டப்பட்டார்.

அலுவலகத்தில் அவருடன் பேசப்பழக ஒருவருமே முன்வராததினால் அவர் தனிமைப் படுத்தப்பட்டார். அவரின் நாளாந்த நடவடிக்கைகள் அவரை மென்மேலும் சக நண்பர்களிடமிருந்து பிரித்து அவரை நட்பிலிருந்து தூரத்திற்கு கொண்டு சென்றுவிட்டன. அவர் நினைத்தார், தான் நடந்து கொள்ளும் விதம் முற்றிலும் தனக்கு பொருத்தமாக இருக்குமென்று ஆனால் அந்த நடவடிக்கைகள் அவரின் திடீர் வீழ்ச்சிக்கு காரணமாகின. நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக முறையற்ற வகையில் ஒரு கைநூலை தயாரித்து விற்பனை செய்த வகையில் திணைக்களத்தின் பார்வையில் அவர் ஒரு குற்றவாளியாக கணிக்கப்பட்டு இடமாற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளமுன் அவர் தாமாகவே வேறு ஒரு மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று சென்று விட்டார். திடீர் உயர்வு போன்று திடீர் வீழ்ச்சிக்கும் அவரே காரணமாக இருந்தார்.

குறித்த கைநூலில் தான் ஒரு வர்த்தக பட்டதாரி என ஒரு போலியான அடையாளத்தை அறிமுகப்படுத்தியதால் பலரின் கேளிக்கைக்கும் உள்ளானார்.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கதை

# என் உள்ளத்தில் நீ மட்டுமே .......... அபிநயா!

மிதிலா ஜெயமோகன்

அபினேஷ் - அபிநயா பெயரிலே அத்தனை பொருத்தம் உள்ள கல்வியற் கல்லூரியில் படித்து முடித்த அழகான காதல் ஜோடிகள். அபினேஷ் கல்லடியில் பிறந்து வளர்ந்தவன். குடும்பத்தில் ஒரே மகன் அதுவும் செலல்ல மகன். அபிநயா கல்முனையில் பிறந்து வளர்ந்தவள். நான்கு அண்ணன்மாருக்கு ஒரே தங்கை. இவர்கள் இருவரும் கல்வியியற் கல்லூரிக்கு வந்த முதல் நாளே காதல் வயப்பட்டவர்கள். இருவரின் வீட்டிலும் இவர்களின் காதலுக்கு ஆரம்பத்தில் பலத்த எதிர்ப்புக்கள் இருந்த போதிலும் அபினேஷ், அபிநயாவின் உண்மையான காதல் அத்தனை எதிர்ப்புக்களையும் முறியடித்து விட்டது. இருவருக்கும் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் திருமணம் என்று நிச்சயிக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் கல்லூரிப் படிப்பு முடிந்த பின்பு அபினேஷ் மட் /சிவானந்தா கல்லாரியிலும், அபிநயா மட்/பட்டிருப்பு மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராக கடமையாற்றுவதற்கான நியமனம் கிடைத்தது. இருவரும் வேலைக்குச் சென்று ஆறு மாதங்களிலே திருமணமும் கோலாகலமாக நடந்து முடிந்தது.

இருவரும் அத்தனை அழகான தம்பதிகள் என்று பார்த்தவர்கள் அத்தனை பேரும் கண் வைத்தனர். அபிநயாவிற்கு அவளின் அண்ணன்மார் நால்வரும் சேர்ந்து அழகான வீடொன்றைப் பரிசளித்தனர். அதில் அபினேஷின் பெற்றோருடன் அபினேஷ் - அபிநயா தம்பதிகள் குடித்தனம் நடத்தி வந்தனர். அபிநயா அபினேஷ் மீது மிகவும் அன்பாக இருந்தாள். அபினேஷிற்கு ஒரு சிறு தலைவலி என்றால் கூட துடிதுடித்து விடுவாள். அபினேஷும் அப்படித்தான். அபிநயாவை கடிந்து பேசுவதே இல்லை. தவறுதலாகக் கூட அபிநயாவின் மனம் நோகும் படி நடந்து கொண்டதும் இல்லை. கண்ணை இமை காப்பது போன்று அபிநயா மீது அளவு கடந்த அன்பும், காதலும் வைத்திருந்தான் அபினேஷ். அபிநயா பக்கத்து வீட்டுக்குச் செல்வதென்றால் கூட அபினேஷிடம் கேட்டு அவன் போ என்று சொன்னால்தான் போவாள். ஆனால் அபினேஷ் அதைச் செய், இதைச் செய்யாதே, அங்கு போகாதே என்றெல்லாம் கட்டுப்படுத்தியதே இல்லை. இருந்தும் அவனிடம் கேட்டு அவன் சொற்படி நடப்பதில் அபிநயாவிற்கு ஒரு திருப்தியும் சந்தோசமும். அவனும் அபிநயா ஏதும் கேட்டால் சிறிதான புன்னகையுடன் செல்லமாக அபிம்மா "போயிற்று வாங்க" என்று கூறிவிடுவான். அத்தனை அழகான குடும்பம்.

அபிம்மா.. அபிம்மா! என்று குளியலறையிருந்தே கத்தினான் அபினேஷ். என்னங்க! இதோ வாறேன் என்று வந்த அபியிடம் தண்ணீர் வரவில்லை அபி கொஞ்சம் மோட்டரைப் போடு என்றான் அபினேஷ். சரிங்க.... என்று மோட்டர் சுவிட்சை போடச் சென்றாள் அபி. ஐயோ! இன்று ரொம்பவே நேரமாகுதே... ஸ்கூலில் வேறு அதிபர் நேரத்திற்கு வரச் சொன்னவர்..... பரிசளிப்பு விழா வேலை வேறு இருக்கு..... இந்த நேரம் பார்த்துதான் எல்லாம் மக்கர் பண்ணும் என்று தனக்குத் தானே பேசியபடி அவசரமாகத் தனது வேலைகளைச் செய்தான் அபினேஷ். அபிநயா தனது கணவனின் அவசரத்தை விளங்கியதால் அபினேஷிற்குத் தேவையான சேட், ரவுசர் எல்லாவற்றையும் அயன் பண்ணி அவன் பாடசாலைக்குக் கொண்டு செல்லும் அனைத்துப் பொருட்களுடன் காலை உணவையும் கட்டி வைத்துவிட்டு அவளும் பாடசாலைக்குச் செல்லவதற்குத் தயாரானாள். காலையில் இருவரும் ஒன்றாகத்தான் சாப்பிட்டுச் செல்வார்கள். இன்று தன் கணவரின் அவசரம் விளங்கியதால் காலை உணவை பார்சல் கட்டியே வைத்துவிட்டாள். அபினேஷ் ரெடியாகி விட்டு அபி.. அபி.. என்று கூப்பிட்டதும் என்னங்க.. நீங்க நேரத்துடன் போக வேணும்தானே நேரத்துடன் பொயிட்டு வாங்க நான் கொஞ்சம் லேற்றாகப் போறேன்.. எனக்கும் கொஞ்சம் களைப்பாக இருக்கிறது என்றாள் அபிநயா. என்ன அபிம்மா உடம்புக்கு ஏதும் முிடியாமல் இருக்கா? என்று பதட்டத்துடன் கேட்டதும் தன் கணவனின் கைகளைப் பற்றி ஒன்றுமில்லிங்க... காலையிலிருந்து நிறைய வேலைதானே அதுதான் கொஞ்சம் களைப்பாக இருக்கு... என்றாள். வேறொன்றும் இல்லைதானே அபிம்மா என்றான் மீண்டும். இல்லை.. நீங்க பொயிற்று வாங்க என்று வாசல் வரை வந்து வழி அனுப்ப வந்தாள் அபி. ஓகே அபி! உடம்புக்கு முடியவில்லை என்றால் ரெஸ்ற் எடுங்க ஸ்கூலுக்கு போக வேண்டாம். அம்மாவிடம் சொல்லி.... என்று சொல்லிக் கொண்டே திரும்பும் போது அபி மயங்கி கீழே விழுவதைக் கண்டான் அபினேஷ்.

அபினேஷ் துடிதுடித்தவனாய் அபி.. அபி.. அபிம்மா என்று கன்னங்களைத் தட்டி எழுப்பினான் அபி எழுந்திருக்கவில்லை. அம்மா... அம்மா... என்று கூப்பிட்டதும் அபினேஷின் தாய் ஓடி வந்து அபி மயங்கிக் கிடப்பதைக் கண்டு என்னாச்சு மகன் என்று பதறினாள். "தெரியவில்லை அம்மா". இருங்க டாக்டர் கிட்ட கூட்டிப் போகலாம்.. என்று கூறிவிட்டு ஓடிச் சென்று ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு வந்ததும் எல்லோரும் அபியைத் தூக்கிக் கெண்டு ஆஸ்பத்திரிக்கு சென்றனர். டாக்டர் அபியை பரிசோதித்துக் கொண்டிருந்தார். அபினேஷ் என்னவென்று தெரியாமல் நகங்களைக் கடித்துத் துப்பியவாறே அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். அபினேஷின் பெற்றோரும் எல்லாக் கடவுளையும் வேண்டிக் கொண்டிருந்தார்கள்.

அபினேஷ் வாழ்த்துக்கள்! என்று கூறிக் கொண்டு வெளியே வந்தார் டாக்டர். என்ன டாக்டர்? என்ன சொல்லிறீங்க? என்றான் பதட்டத்துடன். "எல்லாம் சந்தோசமான விடயம்தான் அபினேஷ் நீங்கள் அப்பாவாகப் போறீங்கள். ஆமாம் அபிநயா கர்ப்பமாக இருக்கிறாள்" என்றதும்... அபினேஷ் சந்தோசத்தில் துள்ளி குதித்து "தங்ஸ் டாக்டர், தங்யூ வெரிமச்" என்று சொல்லி விட்டு "நான் அபிம்மாவைப் பார்க்கலாமா?" என அனுமதி கேட்டு அபிநயா இருந்த அறைக்குள் ஓடிச் சென்றான்.

"அபிம்மா"! என்றான் கண்கள் விரிய மலர்ந்த புன்னகையுடன் "தங்ஸ்டா குட்டி" எனக்கு எப்படி இருக்கு தெரியுமா? சந்தோசத்தில் என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று அபிநயாவின் நெற்றியில் முத்தமிட்டான் அபினேஷ். அபிநயாவின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. டாக்டரிடம் அபியை எப்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும், என்னென்ன கொடுக்க வேண்டும் என்று ஒரு பெரிய லிஸ்ற் எழுதி வாங்கிக் கொண்டான் அபிஷே். அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினான். நாட்கள் கடந்தன. அபிநயாவுக்கு குழந்தைப் பேற்றுக்கான நாளும் நெருங்கியது.

டாக்டர் சொன்னதன் படி அபிநயாவை ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் நடக்க வைக்க வேண்டும் என்பதற்காக அபினேஷ் அவளை கடற்கரைக்கு கூட்டிப் போவது வழக்கம். அவ்வாறு இருவரும் ஒருநாள் கடற்கரைக்குச் சென்றிருந்த போது அபினேஷின் கண்களை பின்னால் வந்து ஒரு பெண் பொத்திக் கொண்டாள். "யாரது" யாரது.. என்று அபினேஷ் கேட்டதும் கையை எடுத்தவளாய் "ஹாய் அபினேஷ்" என்றாள். அபிநயாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் யாரென்றும் தெரியவில்லை. "நான்தான் அபினேஷ்" சரண்யா. என்னை ஞாபகம் இல்லையாடா? என்று உரிமையுடன் கேட்டாள் சரண்யா. நீ.. நீ.. எங்களோட O/L படிச்ச.. நீயாடி... என்ன இப்படி குண்டாப் போயிற்றாய்... எப்போதும் மெலிவாக இருக்கணும் என்று சாப்பிடாமல் திரிவாயே.. இப்போ எப்படி... அது சரி எப்போ லண்டனில் இருந்து வந்த நீ.. எல்லோரும் வந்திட்டாங்களா?.. என்று கேள்வியை அடுக்கிக் கொண்டே சென்றான் அபினேஷ். வெளிநாட்டுச் சாப்பாடு வித்தியாசம்தானே அதுதான் குண்டாயிற்றன். அப்பா, அம்மாதான் ஏதோ இங்கு ஒரு வேலை இருப்பதாகச் சொல்லி கூட்டிக் கொண்டு வந்தாங்க. ஒரு மாத லீவில் வந்தோம்... பிறகு போயிடுவம் என்று கூறிய படியே இதுதான் உன்னுடைய மனைவியா?.. என்று கேட்டாள் சரண்யா. ஆம் மறந்திட்டன். இவள்தான் என் மனைவி அபிநயா.. என்று சரண்யாவுக்கு அறிமுகப்படுத்தி விட்டு... அபி இவள் சரண்யா.... என்னுடன் O/L வரை படிச்சவள்... சரியான வாயாடி.. என்று சரண்யாவைப் பற்றிச் சொன்னான். "ஹாய் அபி" என்றாள் சரண்யா.... பதிலுக்கு மெல்லிய புன்னகையுடன் ஹாய் என்றாள் அபி. சரண்யா வெளிநாட்டில் இருந்ததனாலோ என்னவோ அபினேஷ் திருமணமானவன் என்றில்லாமல் சகஜமாக அவளுடன் கதைத்து விட்டுச் சென்றாள். கடற்கரை இருந்து வீட்டுக்கு வந்ததும் களைப்பினால் கட்டிலில் சாய்ந்தாள் அபிநயா. "அபி" என்று அழைத்துக் கொண்டே அபிநயாவின் பக்கத்தில் வந்து அமர்ந்தான் அபினேஷ். "அபி" சரண்யாவைப் பார்த்தாயா? எப்படி என்னைத் தொட்டுத் தொட்டு சிரித்து கலகலவென்று பேசினாள் என்று. நான் அவளுடன் அப்படிப் பேசும் போது உனக்கு என் மீது கோபம் வரவில்லயைா? என்று கேட்டான் அபினேஷ். அபிநயா சிரித்தவாறே கணவனுக்கு மிக அருகில் வந்து "உங்கள் மீது நான் ஏன் கோபப்பட வேண்டும், நீங்கள் என்ன தப்பு செய்திட்டிங்க?" இங்க பாருங்க.... நீங்கள் என் உயிர், உங்கள் மீது கோபப்பட்டால் நான் என்னை கோபித்துக் கொண்டதுக்கு சமனாகும். உங்கள் மீது அளவு கடந்த அன்பும், நம்பிக்கையும் எனக்கு இருக்கு. நீ என்னோட செல்லம்டா.. "ஐ லவ் யூ" என்று அவன் கன்னங்களைக் கிள்ளி தலையைக் கோதிவிட்டாள் அபிநயா. அபினேஷிற்கு தன் மீது அபிநயா வைத்திருக்கும் அன்பைப் பார்த்து கண்கள் கலங்கின.

மறுநாள் அபினேஷ் வழக்கம் போல் பாடசாலை செல்வதற்குத் தயாரானாள். அபிநயா அசதியாக இருப்பதாகக் கூறி பாடசாலைக்குச் செல்லவில்லை. வீட்டிலேயே தங்கியிருந்தாள். அவளுக்கு அலுப்பும், அசதியுமாக இருந்ததனால் ஏதாவது புத்தகம் படிக்கலாம் என ரமணிச் சந்திரனின் கதைப் புத்தகத்தை எடுத்து புரட்டிய போது ஒரு காகித உறை அவளின் கண்களில் பட்டது. சரண்யாவிற்கு அபினேஷ் எழுதிய காதல் கடிதம் அது. அக்கடிதம் அபிநயாவிற்கு வியப்பாக இருந்தது. "சரண்யா நான் உன் மீது கொண்ட காதல் அளப்பரியது. உன்னுடன் ஒரு நாளாவது சேர்ந்து வாழ வேண்டும். நீ இல்லை என்றால் நான் இல்லை. உங்களைப் பார்ப்பதற்காக இன்று மாலை ஆறு மணிக்கு கடற்கரையில் காத்திருப்பேன் வந்து விடு. இப்படிக்கு காதலுடன் அபினேஷ்" என்று எழுதியிருந்தது. அபிநயாவிற்கு தூக்கி வாரிப் போட்டது. அபினேஷ் ஏன் இதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை?... இதனால்தானோ சரண்யா கதைத்த விதத்தைப் பார்த்து என் மீது கோபம் வரவில்லையா என்ற கேட்டாரோ?.. எதற்காக இதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டார்?.. இதுவரைக்கும் என்னிடம் இவர் ஒன்றையும் மறைத்ததில்லையே?... என்று மனதில் ஆயிரம் கேள்விகள் உருண்டோடின. ஒருவேளை அநாவசியமாக இதைப் பற்றி யோசிக்கின்றேனோ?..... அப்படி இல்லை என்றால் எப்படி இந்தக் கடிதம் என்று எண்ணிக் குழம்பினாள் அபிநயா. இவ்வாறு பல விடயங்களை யோசித்ததனால்தானோ என்னவோ அபிநயாவிற்கு பிரசவ வலி எடுத்தது. அம்மா... அம்மா... என்று கத்தினாள். அபினேஷின் பெற்றோர் அபிநயாவை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்கள். அபினேஷிற்கு தகவல் சொல்லியதும் அடுத்த நிமிடம் ஆஸ்பத்திரியில் நின்றான். எல்லோருக்கும் ஒரே பரபரப்பு. சில மணிநேரங்களில் குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டது. அப்போதுதான் எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

அபினேஷ் தன் மனைவியையும், குழந்தையும் பார்க்கும் ஆர்வத்தில் அபிநயா இருந்த ரூமுக்குள் ஓடிச் சென்றான். அபிநயாவை சந்தோசத்துடனும், பெருமிதத்துடனும் ஒரு பார்வை பார்த்து அபிம்மா... என்று அவள் தலையைத் தடவி "தங்ஸ் அபிச் செல்லம்" என்று சொல்லிய படியே குழந்தையின் பக்கம் தனது பார்வையைச் செலுத்தும் போது.. அபினேஷ்!.. ஏன் என்னிட்ட சொல்லாமல் மறைச்சிங்க?... என்றாள் அபி. அபினேஷ் ஒன்றும் புரியாதவனாய் " என்ன அபிம்மா சொல்லிறிங்க".. எதை மறைச்சன்.. எதைப் பற்றிக் சொல்லிறிங்க?... என்றான்.

சரண்யாவைக் காதலிச்சதைப் பற்றி என்னிடம் ஒன்றுமே சொல்லவே இல்லையே... அபினேஷ் என்றாள். என்ன அபிம்மா... நான்.. நான்.. சரண்யாவைக் காதலிச்சேனா?.. என்ன சொல்லிறிங்க?... எனக்கு ஒண்ணும் புரியல்ல.. என் மீது ஏதும் சந்தேகப்படுறிங்களா?... அபிம்மா என்றான் வேதனையுடன்.. இல்லை அபினேஷ்.. நீங்கள்தான் என்னைச் சந்தேகப்பட்டு இருக்கிறீங்க.. நான்.. நீங்கள் சரண்யாவிற்கு எழுதிய காதல் கடிதத்தைப் படித்தேன். நான் உங்களை ஏதும் சந்தேகப்படுவேன், தப்பாக நினைப்பேன் என்று என்னை சந்தேகப்பட்டுத்தான் என்னிடம் சொல்லாமல் மறைச்சிட்டிங்களா?.. இவ்வளவுதான் நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கையா?.. எனக்கு உங்கள் மீது சந்தேகம் இல்லை அபினேஷ்... இதுவரைக்கும் நீங்கள் என்னிடம் எந்த விடயத்தையும் மறைத்ததே இல்லை என்று ரொம்பவும் பெருமைப்பட்டேன்... இந்த விடயத்தை மறைச்சிட்டிங்களே என்ற வருத்தம்தான் உங்கள் மீது...என்றாள் கண்ணீருடன்.... அபிநயா.

சரண்யாவுக்கு ,எழுதிய காதல் கடிதமா?... என்று சற்று சிந்தித்தவாறே... சற்று நேரத்தில் ஓ! அதுவா?... அந்தக் கடிதத்தை பார்த்தா இவ்வளவு குழம்பினாய் அபிம்மா... என்று கலகலவென சிரித்தான். அபிநாயவுக்கு ஒன்றும் புரியவில்லை. என்னங்க சிரிக்கிறிங்க?... என்றாள் பாவமாக... அந்தக் கடிதம் 10ம் ஆண்டு 3ம் தவணை சோதனை முடிஞ்சி 11ம் ஆண்டுக்கு போனப்போ எங்கட சீனியர்ஸ் A/L அண்ணாமார் எங்களை ராகிங் பண்ணிய போது எழுதியது. ஒவ்வொரு பொடியனுக்கும் ஒரு பொட்டையைக் காட்டி இதுதான் நீ லவ் பன்றவள் இவளுக்கு ஒரு காதல் கடிதம் எழுது என்று சொன்னப்போ எல்லோரும் எழுதினோம். எனக்கு சரண்யாவைக் காட்டித்தான் எழுதச் சொன்னவங்க. அப்போ எழுதிய கடிதம்தான் அது. "முதல் முதல் எழுதின காதல் கடிதம்டா எல்லோரும் பத்திரமாக வைங்கடா" என்று கிண்டலாகச் சொல்லவும் ஏதோ ஒரு புத்தகத்தில் அதை வைத்து விட்டேன். அந்தக் கடிதமா இவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கு என்ற சிரித்துக் கொண்டிருக்கும் போது சரண்யா ஒரு ஆணுடன் உள்ளே நுழைந்தாள்.

என்னடா அபினேஷ் ஒரே சந்தோசம்தான் போல... நீ சிரிக்கிறது ஆஸ்பத்திரிக்கு வெளியில் கேட்குது... என்று கூறியபடி தனது திருமண பத்திரிகையை அபினேஷிடம் நீட்டினாள். உன்னைத் தேடி உன்னுடைய வீட்டுக்குப் போயிருந்தோம் உனக்கு குழந்தை பிறந்திருப்பதாக பக்கத்து வீட்டவர்கள் சொன்னவங்க.

அதுதான் குழந்தையையும் பார்த்திட்டு உன்னிடம் என்னுடைய கல்யாண விடயத்தையும் சொல்லி விட்டுப் போகலாம் என்ற இங்கேயே வந்த நான் என்று கூறி குழந்தையைப் பார்த்தாள் சரண்யா.

அபினேஷ் குழந்தை உன்னைப் போலவே இருக்குடா.. என்று கூறி குழந்தையைத் தூக்கி கொஞ்சி விட்டு, "அபினேஷ் சொல்ல மறந்திட்டன் இதுதான் எனது வருங்காலக் கணவர் சங்கர் என்னோட திருமணத்திற்குத்தான் அப்பா, அம்மா இங்கே கூட்டிக் வந்திருக்காங்க என்று எனக்கு இப்பதான் தெரியும். திருமணம் முடிந்ததும் லண்டன் போயிருவம் என்றாள் சரண்யா". ரொம்ப சந்தோசம் சரண்யா என்றான் அபினேஷ் புன்னகைத்தவாறே." சங்கர்! எனக்கு முதல் முதல் லவ் லெட்டர் கொடுத்தது அபினேஷ்தான் தெரியுமா?.. என்னடா.. அபினேஷ் ஞாபகம் இருக்கா?.. எங்கட சீனியர்ஸ் ராகிங் பண்ணினப்போ அபினேஷை எனக்கு லவ் லெட்டர் எழுதச் சொன்னப்போ இவன் எழுதினான்" மறக்க முடியாத அனுபவம் என கூறிய படியே எல்லோரும் சிரிக்க... அபிநயா வெட்கத்துடன் பார்வையிலே மன்னிப்புக் கேட்டவளாய் அபினேஷைப் பார்த்தாள். கலகலவென்று பேசி கொஞ்ச நேரம் சிரித்து விட்டுச் சென்றாள் சரண்யா.

என்ன அபிம்மா கேட்டாயா? சரண்யா சொன்னதையும்... என்று கூற.. "என்னை மன்னச்சிடுங்க அபினேஷ்" என்றாள் அவனின் கைகளைப் பிடித்தவறே... அபிம்மா என்று அவளின் கன்னங்களை தன் உள்ளங்கையில் தாங்கியவனாய் நான் முதல் முதல் காதல் வயப்பட்ட பெண் அபிதான் என் உள்ளத்தில் நீ மட்டும்தான் அபிம்மா.. அப்பொழுதும், இப்பொழுதும், எப்பொழுதும் என்று கூறி.. என்னை ரொம்பவே யோசிக்க வைத்து விட்டிங்க... அதற்காக எனக்கு ஏதாவது பரிசு குடுக்கணும்.. என்றான் கெஞ்சலும், கொஞ்சலுமாக.. அபியும் வெட்கத்துடனும், பூரிப்புடனும் அதுதான் உங்களுக்கு விலைமதிப்பற்ற பரிசு கொடுத்திருக்கின்றேனே என்று கூறி குழந்தையைத் தூக்கி அபினேஷின் கையில் கொடுத்தாள். "வாங்க குட்டி" என்று குழந்தையை வாங்கி என்னுடைய தங்கம் என்று கொஞ்சியவாறே அபிநயாவையும் அணைத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்வினைக் காண்போம்

கடினங்கள்
மறையாதவரையில்
விடிவேதும் இல்லையே
வாழ்வுக்கு

வார்த்தையின் கடினங்கள்
கேட்போருக்கு
கண்களில் நீரை வருவிக்க
காரணமாகி நிற்குமே

உள்ளத்தின் கடினங்கள்
செயல்களாக
உருவாகி வெளிவரும்போது
தீமைகள் சிரித்து
கொக்கரிக்கவே
அநீதிகள் அங்கே
அக்கினியாகி
பற்றி எரியுமே பாதகமாக

வீடுகள் எரிந்து
சாம்பலாகும்
உடல்களும் அங்கே
கருகிப்போகுமே
உறவுகள் அங்கே
மறைந்து போக
உருகிவழியுமே
கண்களங்கே

வழிபடும் மதங்கள்
சொன்னவைகள்
மறைந்து கலைந்து
போய்விடவே
மனங்கள் கொண்ட
கடினங்களால்
மதங்கொண்ட
யானைகள் போலங்கே மனிதங்கள்
மறைவது
வேதனையாகுமே

வழிபடும் தெய்வங்களை
உடைத்தெறிந்து
வழிபாட்டுத் தலங்களை
அழித்துவிட
மனங்களின் கடின
நிலைகளதே
அடித்தளமாக அவை
நிற்பதுண்மையே

மூர்க்கனும் முதலையும்
கொண்டதுவிடா
என்பது கூறும்
செய்தியில் உள்ளதை
மறுத்துக்கூற முடியுமா
ஆணவங்கள் பெருக மனம்
அதர்மத்தால்
கொதித்து நிற்க
பேரழிவே உருவாக
வழிகாட்டும் அழிவுக்கே
பகையும் பழியும்
துரோதங்களும் வழியாக
வாழ்வுகளென்றுமே
வளம் காணாது உண்மையே
அன்பும் அறமும்
பெருகிடமனதில்
அழிவுக்கு அங்கு
இடமேதுமில்லையே
உண்மையில் இந்நிலை
பெருகுமானால்
உயர்வின்நிலைகளை
காண்போம் வாழ்விலே.

அருட்பணி
என்.சி. அருள்வரதன்



## கழியும் இரவுகள்



இரவுகளின் நீளம் இப்போதெல்லாம் - என்
தனிமையை எனக்கு உணர்த்துவதில்லை
படபடத்து வியர்த்து நனைந்து போகிறேன்
தினமும் பயத்தில்.....

வீட்டிலிருந்தாலோ எப்போதும்
என்னையே பாவமாய்ப் பார்க்கும் அப்பா.....
ஊரிலுள்ள கோயில்களுக்கெல்லாம்
நேர்த்தி வைத்தபடி அம்மா.....

அண்ணா ஏனம்மா வீட்டுக்குள்ளேயே
இருக்கிறான் என்று கேட்கும் தம்பி....
தம்பிய கவனமாக இருக்கச் சொல்லுங்கோ
தொலைபேசியில் நள்ளிரவில் அக்கா.....

உறவுகள் என்னால் துடிக்கும் துடிப்பு
அதிகாலை மணி ஆறுவரை....
இளமைக்கால இரவுகள் இப்படிக் கழிகையில்
பகல்களின் வேதனைகள் இன்னும்
கொடூரமாய் என்னைத்தாக்கிய படி!

ச.கோபிரமணன்

## வாழ்நாள் எல்லாம்......

வாழ்நாள் எல்லாம்
என் காதோரம்

வந்து

காற்று சொல்லும்

சேதி

உன்பெயர் மட்டும் தான்

ஜே. மதிவதனி



(தொடர்கிறது.....)

இன்று தொலைபேசி அல்லது கைபேசியூடான துஸ்பிரயோகங்கள் மலிந்து காணப்படும்

## முட்களின் நடுவே ரோஜாக்கள்

சூழலில் பெற்றோர் 18 வயதிற்குக் குறைந்த யாருக்கும் கைபேசி வழங்குவதை முற்றாக நிறுத்தும் போதே பிள்ளைகளுக்கு கல்வி மட்டில் உண்மையான அர்பணிப்புள்ள ஈடுபாட்டை தோற்றுவிக்க முடியும்.

**02. பாடசாலை இடைவிலகும் மாணவர்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தல்.**

மாவணர்கள் பாடசாலை இடைவிலகும் சம்பவங்கள் இன்று ஓர் சர்வசாதாரண நிகழ்வாக மாறிவருகிறது. திருகோணமலை மாவட்டத்தில்



இறக்கக்கண்டி, குச்சவெளி, புல்மோட்டை, மூதூர், வெருகல் மற்றும் கிண்ணியா போன்ற பிரதேசங்களில் பாடசாலை இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக இப்பிரதேச பாடசாலைகளிலிருந்து கிடைக்கப்பெறும் மாணவர் வரவுப் பதிவேடுகளினூடாக அறிந்துகொள்ள முடிகின்றது.

புல்மோட்டை, அரிசிமலை பிரதேசத்தில் மட்டும் மிகக்குறுகிய காலத்தில் 150க்கு மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலகி வெவ்வேறு வியார மற்றும் இதர தொழில்களில் ஈடுபட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட செயலக சிறுவர் பாதுகாப்புப் பிரிவிற்கு முறைப்பாடு கிடைத்திருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. காலபோக தொழில்களான சோளம், நாவற்பழம், பாலப்பழம், கச்சான் கடலை போன்றவைகளின் விற்பனை நடவடிக்கைகளில் சிறார்கள் தாராளமாக ஈடுபடுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. சில பிரதேசங்களில் பிள்ளைகள் இடைவிலகலை அவர்களின் பெற்றோரே ஊக்குவித்து அவர்களைத் தொழில்களில் ஈடுபடுத்தும் நிலைமைகள் மிகவும் வருந்தத்தக்கவை. வறுமையை காரணம் காட்டி பிள்ளைகளின் கல்வி விருத்தியில் மண்போடும் இத்தகைய செயற்பாடுகள் முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும். பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ள மாணவர்களுக்கு எதிராக இனிவரும் காலங்களில் காவல்துறையினரின் ஒத்துளைப்புடன் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுபாப்பு அதிகாரசபை அதன் மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களினூடாக நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி உள்ளது. பாடசலை செல்லாதுள்ள மற்றும் பிற துஸ்பிரயோகங்களில் சிக்கியுள்ள பிள்ளைகள் தொடர்பாக தேசிய சிறுவர் இலக்கமான 1929 என்ற இலவச சேவையை முறைப்பாடு செய்வதனூடாக மாணவர் இடைவிலகலை ஒளிப்பதற்கும், வெவ்வேறு துஸ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதற்கும் முக்கிய பங்காற்ற முடியும்.

**03. அதிகரித்துச் செல்லும் இளவயது திருமணங்களைக் கட்டுப்படுத்துதல்.**

குழந்தைகளே குழந்தைகளைப் பிரசவித்தல் என்பது மிகப் பாரதூரமான ஆபத்தை விளைவிக்கின்ற சம்பவமாகும் என ஐக்கிய நாடுகள் சபை வருடந்தோறும் எச்சரித்துவருகின்றது.

## சிறுவர்களின் நல்வாழ்விற்காக எம்மை அற்பணிப்போம்

ஆயினும் 14 வயதிற்கும் 18 வயதிற்கு மிடையே உள்ள பெண்கள் திருமணமாகியோ அல்லது திருமணமாகாமலோ கருத்தரிக்கும் சம்பவங்களை பொதுச் சுகாதார மற்றும்



குழந்தைப்பிரசவ பதிவுகள் உறுதிப்படுத்துகின்றன. திருகோணமலை மாவட்டத்திலும் இப்பிரச்சனையின் தாக்கம் வலுவாக உணரப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இளவயது திருமணம் சமூகத்திலும் வெவ்வேறு எண்ணிக்கையில் காணப்படுகின்றது. இருப்பினும் இவ் எண்ணிக்கை முஸ்லிம் சமுதாயத்தில் சற்று அதிகமாகவே இருக்கின்றமையை முஸ்லிம் சகோதரர்களே ஏற்றுக்கொள்கிறார்கள். யாராக இருப்பினும் குறிப்பிட்ட பெண்பிள்ளைகளினதும் மற்றும் எதிர்கால சந்ததியினதும் நல்வாழ்வு கருதி இளவயது திருமணங்கள் தடுத்து நிறுத்தப்படுவது அவசியமாகும்.

போதிய கல்வி




அறிவீனம் பொருளாதாரம் போதாமை மற்றும் போதிய மனமுதிர்ச்சியின்மை போன்றவற்றுடன் இளவயதில் திருமணம் செய்து கொள்ளும் குடும்பங்களில் நீடித்த வறுமையும், தொடர் புறக்கணிப்புக்களும் மேலும் கணவன் - மனைவி உறவுச்சிக்கல்களுமே நீடிக்கின்றன. உண்மையில் இளவயதில் திருமணம் செய்து கொள்பவர்கள் தமக்கும், தமது பிள்ளைகளுக்கும் அவமானத்தையும், தீமையையும் வரவளைத்துக் கொள்கிறார்கள்.

இன்றைய நவீன உலகில் பொருளாதார சிக்கல்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் போதியகல்வியறிவையும் தொழிற் திறன்களையும் பெற்று உடல் - உள விருத்தியுடன் சிறந்த சமுதாயம் படைப்பதற்கு திருமணவயதை ஆண் பெண் இருபாலாரும் குறைந்தது 20க்கு மேல் வரையறுப்பதே சாலச் சிறந்தது.

(மிகுதி அடுத்தவாரம்)

ச.அல்பேட் ஸ்ரீகன்
B.A.Psy., M.Sc. HRD Psy.(India)
மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மாவட்ட செயலகம் - திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசூல் வேட்டையில் ராஜா ராணி!



ரசிகர்களிடையே பெரும் வரவேற்பு பெற்று ஓடிக்கொண்டிருக்கும் படம் ராஜா ராணி. அட்லீ இயக்கத்தில் ஆர்யா, ஜெய், நயன்தாரா, நஸ்ரியா முதலானோர் நடிப்பில் வெளியாகியுள்ளது.

இப்படம் இந்தியா மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் வெளியாகி இதுவரை 12 கோடி ரூபாய்க்கும் மேல் வசூலாகி தொடர்ந்து வசூலில் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது. இந்த வருடம் வெளியான படங்களில் வசூலில் நான்காவது இடத்தைப் பிடித்திருக்கிறதாம் இந்த ராஜா ராணி.

அது மட்டுமல்லாமல் இதுவரை ஆர்யா நடித்து வெளியாகிய படங்களிலேயே இந்தப் படம் தான் அதிக வசூலை குவித்த படம் என்ற பெருமையும் ராஜா ராணி பெற்றிருப்பதாக கூறப்படுகிறது.

இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க ஏ.ஆர்.முருகதாஸ் தயாரித்துள்ளார்.

## ஹாட்ரிக் அடித்த நேரம் ஜோடி!



மூன்றாவது முறையாக ஜோடி சேர்ந்து ஹாட்ரிக் சாதனை படைத்துள்ளார்களாம் நேரம் ஜோடி. 2011ல் யூவ் என்ற மலையாள ஹிப்-ஹாப் ஆல்பத்துக்காக ஜோடிசேர்ந்த நிவின், நஸ்ரியா இருவருக்கும் அந்த ஆல்பத்தை பார்த்துத்தான் நேரம் படத்தில் ஜோடியாக நடிக்கும் வாய்ப்பு வந்தது.

நேரம் படத்தில் இந்த ஜோடிக்கு கிடைத்த வரவேற்பு இப்போது இன்னொரு மலையாள படத்திலும் அவர்களை மீண்டும் ஜோடி சேர்த்திருக்கிறது. படத்தின் பெயர் ஓம் சாந்தி ஓசானா. இந்தப்படத்தை ஜூட் ஆண்டனி என்பவர் இயக்குகிறார். இந்தப்படத்தின் கதை நஸ்ரியாவை சுற்றியே பின்னப்பட்டிருக்கிறதாம்.

இந்த விடயம் தெரிந்தாலும் கதை பிடித்துப்போனதால் அதைப்பற்றி கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் நாயகனாக நடிக்க சம்மதித்து விட்டார் நிவின்.

## ஸ்ருதியுடன் ஆர்யா!



ராஜா ராணி படத்தின் வெற்றியைத் தொடர்ந்து ஸ்ருதியுடன் ஜோடி சேரவுள்ளார் ஆர்யா.

ஆர்யா நடித்த இரண்டாம் உலகம், ஆரம்பம் ஆகிய படங்கள் வருகிற தீபாவளி சரவெடியில் வெடிக்க காத்துக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் தடையறத் தாக்க புகழ் மகிழ் திருமேனி இயக்கும் புதிய படத்தில் ஒப்பந்தமாகியுள்ளாராம்.

இன்னும் பெயரிடப்படாத இப்படத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிக்கவுள்ளார்.

மேலும், இப்படத்திற்கு கொலைவெறி புகழ் அனிருத் இசையமைக்கவுள்ளார்.

ஆனால் ஏற்கெனவே இதுபோன்ற செய்திகள் கொலிவுட்டில் தண்டோரா அடிக்கப்பட்டு பின் நிராகரிக்கப்பட்டதால். தற்போது இச்செய்தினை, ஆர்யாவே தனது ட்விட்டர் வலைதளத்தில் உறுதிபடுத்தியுள்ளார்.

தற்போது ஆர்யா, எஸ்.பி .ஜனநாதன் இயக்கும் புறம்போக்கு படத்தில் நடிக்கவிருக்கிறார்.

அதேபோல் ஸ்ருதியும் இந்தியில் இரண்டு படங்களும், தெலுங்கில் ஒரு படமும் நடித்து வருகிறார்.

தொடர்ச்சியாக படங்கள் குவிந்த வண்ணம் இருக்கையில் அனைத்து படங்களுக்கும் காலஷீட் கொடுத்து வருகிறாராம் ஆர்யா.

இந்த படங்குக்கு பிறகு இவர்கள் இருவரும் இணைந்து மகிழ் திருமேனி படத்தில் நடிக்கவுள்ளனராம்.

## சுவிட்சர்லாந்து பறக்கும் உதயநிதி- நயன்தாரா ஜோடி

உதயநிதியோடு டூயட் பாட சுவிட்சர்லாந்து செல்கிறாராம் நயன்தாரா. ஒரு கல் ஒரு கண்ணாடி பிரமாண்ட வெற்றியைத் தொடர்ந்து உதயநிதி நடிக்கும் திரைப்படம் இது கதிர்வேலன் காதல்.

இதில் உதயநிதிக்கு ஜோடி போட்டுள்ளார் நயன்தாரா. இவர்களுடன் இப்படத்தில் சந்தானம், சயாசிங் மற்றும் பலர் நடித்துவருகின்றனர். இப்படத்தை சுந்தரபாண்டியன் புகழ் எஸ்.ஆர்.பிரபாகரன் இயக்கி வருகிறார்.

காதல் மற்றும் கொமடி கலந்த இப்படத்தின் படப்பிடிப்பானது பரபரப்பாக நடந்து கொண்டிருக்கும் நிலையில் சுவிஸ் நாட்டிற்கு பறக்கிறார்களாம் காதல் ஜோடிகள்.டூயட் பாடுவதற்கு சுவிஸ் மட்டுமல்லாமல் ஸ்பெயின் மற்றும் போர்சுகல் நாட்டிற்கு செல்கிறார்களாம். ரெட் ஜெயண்ட் மூவீஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.

# சினிமுரசு

## ராஜா ராணி



ஆர்யாவும் நயன்தாராவும் ஒருவருக்கு ஒருவர் பிடிக்காமல் பெற்றோர்களின் கட்டாயத்தினால் திருமணம் செய்து கொள்கிறார்கள். இருவரும் இல்லற வாழ்க்கையில் விருப்பமில்லாமல் எதையோ பறிகொடுத்தது போல் வாழ்கிறார்கள். ஒரு வீட்டுக்குள் தனித்தனியே யார் என்பது தெரியாததுபோல் ஒரு வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

ஒருநாள் நயன்தாராவுக்கு வலிப்பு நோய் வருகிறது. உடனே, அவரை ஆர்யா மருத்துவமனைக்கு கொண்டு செல்கிறார். சிகிச்சைக்குப் பிறகு சகஜ நிலைக்கு திரும்பும் நயன்தாராவிடம், எப்படி இதுபோல் ஆனது என ஆர்யா விசாரிக்கிறார். அப்போது, நயன்தாரா தான் ஏற்கெனவே ஜெய்யை காதலித்ததாகவும், அவன் தற்கொலை செய்து கொண்டதையும் ஆர்யாவிடம் சொல்கிறார். இதைக் கேட்கும் ஆர்யா, நயன்தாரா மீது காதல் வயப்படுகிறார். ஆனால், நயன்தாரா ஆர்யாவை வெறுத்தே ஒதுக்குகிறார்.

ஆர்யாவை நயன்தாரா வெறுப்பதைக் கண்டு ஆர்யாவின் நண்பரான சந்தானம் ஒருநாள் நயன்தாராவை சந்தித்து தன் நண்பன் ஏற்கெனவே நஸ்ரியாவை காதலித்ததும், அவன் கண்முன்னேயே நஸ்ரியா விபத்தில் இறந்ததையும் கூறுகிறார். இதைக் கேட்கும் நயன்தாராவுக்கு ஆர்யா மீது மரியாதை ஏற்படுகிறது.

இறுதியில், இருவரும் மனம் மாறி இல்லற வாழ்க்கையில் சேர்ந்தார்களா? என்பதே மீதிக்கதை.ஆர்யா பிளேபாய் கேரக்டரில் நடித்திருக்கிறார். அது அவருக்கு நன்றாகவே வந்திருக்கிறது. திருமணம் செய்தபிறகு தன்னை மதிக்காத நயன்தாரவை வெறுப்பேற்றும் காட்சியிலும், நஸ்ரியாவை விழுந்து விழுந்து காதலிக்கும்போதும், சந்தானத்துடன் இணைந்து காமெடி பண்ணுவதிலும் கலக்கியிருக்கிறார்.

நயன்தாராவுக்கு படத்தில் அழுதுவடியும் காட்சிகளாக இருந்தாலும், அழகாக இருக்கிறார். ஜெய்யும், இவரும் இணைந்து நடித்துள்ள காட்சிகள் ரசிக்கக்கூடியது. இவருடைய தந்தையாக வரும் சத்யராஜும், இருவரும் நடித்த காட்சிகள் இதுபோன்று அப்பா-மகள் நண்பர்களாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று யோசிக்க வைத்திருக்கிறது.

ஜெய் வெகுளியான கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். அடிக்கடி பயத்தில் அழுதாலும் படம் பார்ப்பவர்களை சிரிக்க வைத்து கைதட்டல் பெறுகிறார். நகைச்சுவைக்கு சந்தானம், சத்யன் என இருவரும் இருக்கிறார்கள். ஆர்யாவுடன் சந்தானம், ஜெய்யுடன் சத்யன் என ஆளுக்கொரு பக்கம் நகைச்சுவையில் பின்னி பெடலெடுத்திருக்கிறார்கள்.

சத்யராஜ் இப்படத்தில் இன்னும் இளமையாக நடித்திருக்கிறார். நயன்தாராவுக்கு அப்பாவாக மட்டுமல்லாமல், அவருக்கு நல்ல நண்பராகவும் தோன்றுகிறார். ஜி.வி. பிரகாஷ் இசையில் பாடல்கள் ஏற்கெனவே ஹிட்டாகியுள்ளன. அதை காட்சிப்படுத்திய விதம் அருமை. பின்னணி இசையிலும் அசத்தியிருக்கிறார்.

ஷங்கரிடம் உதவியாளராக இருந்த அட்லி இப்படத்தை இயக்கியிருக்கிறார். காட்சிகளை தெளிவாகவும், அழகாகவும் படமாக்கியிருக்கிறார். நம்முடைய முந்தைய வாழ்க்கையை மனதில் வைத்துக்கொண்டு தற்போது கிடைக்கும் வாழ்க்கையை வீணடிக்கக்கூடாது. காதலித்த பழைய வாழ்க்கையை மறந்துவிட்டு கிடைத்த வாழ்க்கையை காதலிக்க பழகிக்கொள்ளுங்கள் என்று ஒரு எதார்த்தமான கதையை எடுத்துக் கொண்டு அதை, அழகாக சொல்லியிருக்கிறார் இயக்குனர் அட்லி. திரைக்கதையை ரொம்ப சாதுர்யமாக கையாண்டியிருக்கிறார். இறுதிக் காட்சிகளை இழுத்தடிக்காமல் சுருக்கமாக முடித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மொத்தத்தில் 'ராஜா ராணி' மகுடம் சூட்டலாம்.

## மிசஷ்கினுடன் இணையும் கமல்



இயக்குனர் மிஷ்கினுடன் கைகோர்க்கும் திட்டத்தில் உள்ளாராம் உலக நாயகன்.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகி அனைவரது பாராட்டையும் பெற்றிருக்கும் படம் ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

முகமூடி தோல்வியால் வருத்தப்பட்ட மிஷ்கினை, இந்தப் படத்தின் வெற்றியானது மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைத்துள்ளது.

பாடல்களே இல்லை, முக்கியமாக மிஷ்கினின் குத்துப்பாட்டு இல்லை, கதாநாயகி இல்லை. என பல இல்லை"கள் இருந்தாலும், அவற்றையெல்லாம் தாண்டி மிகப்பெரிய முத்திரையைப் பதித்திருக்கிறது. சமீபத்தில் கமல்ஹாசனை பிரசாத் ஸ்டுடியோவுக்கு பிரத்யேகமாக அழைத்த இளையராஜா, ஓநாயும் ஆட்டுக்குட்டியும் படத்தைத் திரையிட்டுக் காட்டியிருக்கிறார். முழு படத்தையும் பார்த்து மிரண்டுபோன கமல் நெகிழ்ந்துபோய் மிஷ்கின்னைப் பாராட்டி கங்கிராட்ஸ் சொல்லி இருக்கிறார்.

அதுமட்டுமில்லை சீக்கிரமா நாம ரெண்டு பேரும் சேர்ந்து படம் செய்வோம் என்று சொல்லி மிஷ்கினை மகிழ்ச்சியில் மிதக்க வைத்துள்ளாராம் கமல்.

## விக்ரமின் ஜோடி நானா? ஹன்சிகா



தரணி இயக்கும் ராஸ்கல் படத்தில் விக்ரம் ஜோடியாக நடிக்கவில்லை என்று கூறியுள்ளார் ஹன்சிகா.

ஷங்கர் இயக்கும் ஐ படத்துக்குப் பிறகு தரணி இயக்கத்தில் நடிக்கிறார் விக்ரம். இந்தப் படத்துக்கு ராஸ்கல் எனப் பெயர் வைத்துள்ளனர். விக்ரமுக்கு ஜோடியாக நடிக்க கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு கதாநாயகி செலக்ஷனை நடத்திப் பார்த்தார் தரணி. மும்பையில் 'ரூம் போட்டு கூட யோசித்துப் பார்த்தார். ஆனால் யாருமே செலக்ட் ஆகவில்லை. ஒருவழியாக ஹன்சிகா மோத்வானியைத் தேர்ந்தெடுத்து இருப்பதாக கொலிவுட்டில் தண்டோராக்கள் வெளிவந்தன.

ஆனால் இதனை மறுத்துள்ளார் ஹன்சிகா. ஏனெனில் தனது கைவசம் 9 படங்களை வைத்துக்கொண்டு பிசி ஷெடியூலில் உள்ளாராம் ஹன்சிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கும் அமேசான்



ஒன்லைன் மூலம் பொருட்களை விற்பனை செய்யும் சேவையினை வழங்கிவரும் தளமான அமேசான் ஆனது சுமார் 70,000 பேருக்கு தற்காலிக வேலை வாய்ப்பினை வழங்க காத்திருக்கின்றது.

இதன்படி பருவகால வேலைக்காக காத்திருப்போரை முழு நேர வேலைக்கு அமர்த்தவுள்ளது. இவ்வாறு வேலைக்கு புதிதாக சேர்க்கப்படவுள்ளவர்களை கொண்டு தனது 40 நிலையங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பவும் அமேசான் முடிவு செய்துள்ளது.

அமேசானினால் இந்த வருடம் வழங்கப்படவுள்ள குறித்த வேலைவாய்ப்பு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் அதிகளவு என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தண்ணீரை சுத்தப்படுத்த பழத்தோல்களே போதுமானது



தண்ணீரை சுத்தப்படுத்துவதில் பல்வேறு தொழில்நுட்பங்கள் காணப்பட்டாலும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் சற்று வித்தியாசமான முறையை கையாளுகிறார். இந்த புதிய தொழில்நுட்பத்தில் தக்காளி மற்றும் ஆப்பிள் தோல்களை பயன்படுத்தி தண்ணீரை சுத்தப்படுத்தலாம் என்று கண்டுபிடித்துள்ளார்.

தக்காளி தோல்கள் மாசுபட்ட தண்ணீரின் கழிவு பொருட்கள், அதில் கரைந்திருக்கும் ரசாயனம் மற்றும் சாயபொருட்கள், பூச்சிகொல்லி மருந்துகளை நீக்கும் தன்மையானது.

மேலும் ஆப்பிள் தோலானது தண்ணீரில் கலந்திருக்கும் கழிவுகளை உறிஞ்சும் தன்மை உடையதாகும்.

இந்த புதிய தொழில்நுட்பத்தை சிங்கப்பூர் நே'னல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ராமகிருஷ்ணா மல்லம்பட்டி என்பவர் கண்டுபிடித்துள்ளார். இவர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்.

இதற்கு மிகக் குறைந்த செலவேயாகும் என்றும் இந்த சுத்திகரிப்பு எந்திரம் செயல்பட, மின்சாரம் தேவை என்றும் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டுப் பையன்

## அப்பிளிக்கேஷன் ஸ்டோரை உருவாக்கும் முயற்சியில் மைக்ரோசொப்ட்



கூகுள் மற்றும் அப்பிள் நிறுவனங்கள் தமது இயங்குதளங்களில் பயன்படுத்தக்கூடிய மென்பொருட்களை பயனர்கள் இலகுவாக பெற்றுக்கொள்ளும் பொருட்டு அப்பிளிக்கேஷன் ஸ்டோரை உருவாக்கியுள்ளன.

இவற்றினைத் தொடர்ந்து தற்போது மைக்ரோசொப்ட் நிறுவனமும் விண்டோஸ் மற்றும் விண்டோஸ் போன் ஆகியவற்றிற்கான மென்பொருட்களை வழங்கும் முகமாக புதிய அப்பிளிக்கேஷன் ஸ்டோரை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. எதிர்வரும் வருட ஆரம்பத்தில் வெளியிடப்படவுள்ள விண்டோஸ் போன் 8.1 இயங்குளத்துடன் கூடிய கைப்பேசிகளுடன் இந்த அப்பிளிக்கேஷ் ஸ்டோரும் அறிமுகம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறந்த நேரத்தை துல்லியமாக காட்டும் கடிகாரம்

விபத்து மற்றும் கொலை உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் இறந்த நேரம் என்பது விசாரணைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆனால், தற்போதுள்ள முறையில் இறந்த நேரம் உத்தேசமாகவே கொடுக்கப்படுகிறது. இந்நிலையில் இறந்த நேரத்தை துல்லியமாக கணக்கிட உதவும் வகையில் ஒரு கடிகாரத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இது குறித்து ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறுகையில், இறந்தவரின் உடலில் ஏற்படும் பாக்டீரியாக்களின் மாற்றத்தை கொண்டு அவர் இறந்த நேரத்தை துல்லியமாக அறிய முடியும்.

புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கடிகாரத்தில், அதி நவீன தொழில் நுட்பம் மூலம் ஜீன்களை பகுத்தாய்வு செய்ய முடியும் என்றும் அதன் மூலம் 48 மணி நேரத்தில் இருந்து நான்கு நாட்கள் வரையிலான கால கட்டத்திற்குள் இறந்த நேரத்தை கண்டறிய முடியும் எனவும் கூறினார்.

## ஒரு கொலையின் கதை

23 (மாயன்)

**கைகள் கட்டப்பட நிலையில் இருந்ததால் டொடிக்கான அழைப்பை அவர் மேற்கொண்டார்......**

அதற்கு முன் அவரது சகபாடிகள் டொடியின் வீட்டுக்கு அருகில் நிலையெடுத்திருந்த தமது இரண்டாவது அணியை உசார்ப்படுத்தி யிருந்தனர். அவர்கள் டொடியின் வருகைக்காக மிக அமைதியாக காத்திருந்தனர்.

அலிகவின் வீட்டிலிருந்த ஏனைய ஆறு புலனாய்வாளர்களும் மிக வேகமாக அந்த வீட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிறியதொரு தேடுதல் வேட்டையை நடத்தினர். எனினும் அவர்களுக்கு அங்கு எவ்வித தடயங்களும் கிடைக்கவில்லை. அதன் பின்னர் அலிகவின் பிரத்தியேக அறை ஏதும் உண்டா என புலனாய்வாளர்கள் அந்த இளம் மனைவியிடம் விசாரித்தனர்.

அதற்கு அவள் தமக்கான படுக்கை அறையை விட அலிக மற்றைய அறையிலேயே அதிக நேரம் செலவிடுவதாகவும் அதனால் அவ்வறையை அவனது பிரத்தியேக அறையாகக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தாள். தமது படுக்கை அறையினுள் குழந்தை இரவு வேளைகளில் அடிக்கடி எழுந்து அழுவதால் அலிக அவ்வறைக்குள் படுப்பதில்லை என்றும் மற்றைய அறைக்குள்ளேயே அவன் படுப்பான் என்றும் அவள் மேலும் தெரிவித்தாள்.

அவ்வறையை மேலோட்டமாக நோட்டமிட்டனர் புலனாய்வாளர்கள். இரட்டைப் படுக்கையொன்று, வெளிக்காட்டும் அலுமாரி (showcase) ஒன்று, கணணியொன்று, பாட்டிசைக்கும் சொனி ரக வானொலியொன்று ஆகியவையே அவ்வறையில் வெளிப்படையாகத் தெரியக் கூடியவாறு இருந்தன.

"அம்மணி இங்கே வாருங்கள்" அறையை நோட்டமிட்ட புலனாய்வாளரின் அழைப்பை ஏற்று அலிக வின் மனைவி அவருக்கு அருகில் சென்றாள்.

"இந்த அறைக்குள் தங்களுக்குத் தேவையான ஏதும் உண்டா?" அவரது கேள்வியை முழுதாகப் புரிந்து கொள்ளும் நிலையில் அந்தப் பெண் இல்லை. "நான் கேட்பது உங்களுக்குப் புரியவில்லை என்று நினைக்கின்றேன்" ... "நாங்கள் இந்த அறையை பூட்டிக் காப்பிடப் போகின்றோம் (ளநயட) அதற்கு முன் உங்களுக்குத் தேவையான எவையும் இருந்தால் தயவு செய்து அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் அந்தப் புலனாய்வாளர். அப்போது தான் அப் பெண்மணிக்கு என்ன நடக்கப் போகின்றது என்பது விளங்கியது. தனது வீட்டிலேயே தான் அன்னியமாகி நிற்பதை உணர்ந்த அவளுக்கு அழுகை விழிகளில் ஜனனித்தது. மெதுவாக விரல்களால் விழிணைத் துடைத்தபடி.... எதையும் பேசாமல் அவள் அந்த அறைக்குள் நுழைந்தாள்... மின் அழுத்தியையும், கைப்பேசிக்கு மின்னேற்றும் கருவிகளையும் எடுத்துக் கொண்டு அவள் வெளியே வந்தாள். மின்அழுத்தியை வாங்கிப் பரிசோதித்து விட்டு அவளிடமே திருப்பித் தந்த புலனாய்வாளர் " சரியா?" என்றொரு கேள்வியை எறிந்தார்.

ஒரு தலையசைப்பின் ஊடாகத் தனது சம்மதத்தைத் தந்து விட்டு அப் பெண் அலிக வை நேரடியாகப் பார்த்தாள். அவன் எதுவும் பேசாமல் அமைதியாகத் தலையைத் தாழ்த்தியிருந்தான்.

டொடியின் தொலைபேசி அலறத் தொடங்கியது... அது அதிகாலை நேரம் சரியாக 2.40 நிமிடங்கள்..... டொடி தனது தொலைபேசி அழைப்பிற்குப் பதிலளிக்கும் நிலையில் இல்லை.

மீண்டும்.... மீண்டும் அலிக வின் தொலைபேசியில் இருந்து டொடியின் தொலைபேசிக்கு அழைப்புக்கள் சென்ற வண்ணம் இருந்தன. அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்ததைத் தொடர்ந்தே டொடியின் விடுதிற்குக் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அங்கு கடமையில் இருந்தவர்கள் டொடி இரவு வீடு திரும்பியதையும் அவன் வீட்டிலேயே இருப்பதையும் உறுதி செய்திருந்தனர். அதனால் வேறு எந்த முடிவிற்கும் போகாமல் புலனாய் வாளர்கள் அவனைத் தொலைபேசியூடாக அழைத்த வண்ணமே இருந்தனர். சில நிமிடங்களின் இறப்பின் பின் டொடியின் தொலைபேசி உயிர் பெற்றது.

"ஹலோ.... கதைப்பது யார்?" என்ற அவனது அதட்டும் குரலிலேயெ அவன் இன்னும் நித்திரையில் இருந்து முழுவதுமாக முழிக்கவில்லை என்பதும் தொலைபேசியின்' திரையைப் பார்க்கவில்லை என்பதும் புலனானது.

இப்பொது அக் கைப்பேசியை அலிக வின் வாய்க்க அருகில் பொருத்தினார் புலனாய்வாளர். அக் கைப்பேசியின் ஒலிபெருக்கி இயங்கு நிலையில் இருந்தது.

" நான்தான் "...... "என்ன அலிக இந்த நேரத்தில்.... நிம்மதியாப் படு எல்லாம் சரியா வரும்"..... "இல்லை நான் உன்னை இப்பவே பார்க்க வேண்டும்" "இப்பவா? சாத்தியமே இல்லை...



என்னால வரவும் ஏலாது... நாளைக்கு காலையில் சந்திப்பம்".... "நீ வர வேணாம் இப்ப... நான் உன் வீட்டு வாசலில் தான் வந்து நிற்கிறேன்" "வாசலிலா?" "ஓம்.... கதவைத் திறந்து பார்... கார் நிற்கின்றது. அதற்குள் இருக்கிறேன் நீ வா".....

டொடி தனது கைப்பேசியை அணைத்து விட்டு சாளரத்தின் ஊடாக கார் நிற்பதை அவதானித்தான். பற...பற...வென உடையை மாற்றிக் கொண்டு வேகமாக வந்து கார் கதவைத் திறந்த கணத்தில்......... அவன் வேகமாக வந்து கதவைத் திறக்கவும் அவனை விட வேகமாக செயற்பட்ட புலனாய்வாளர்கள் அவனை மடக்கிப் பிடித்து வாய்க்குள் துணியை நிரப்பிக் கொண்டனர். திமிற முடியாத அழுங்குப் பிடி..... மெல்லிய வெளிச்சத்தில் புலனாய்வாளர் ஒருவர் தனது அடையாளத்தை அவனுக்குக் காட்டினார்.

தான் தப்பமுடியாத வலைக்குள் விழுந்து விட்டதை டொடி உணர்ந்து கொண்டான். இனி தப்பியோட எவ்வித வழிகளும் இல்லை என்பதால் அவர்களின் கட்டளைப்படி அவன் செயற்படத் தொடங்கினான்.

தொடர்பாடற் சாதனங்கள் உயிர் பெற்றன..... " வேடன்....இது கழுகு2....பறவை2 வலைக்குள்...பறவை2 வலைக்குள்"...... "கழுகுகள் நிலைகளுக்குத் திரும்பலாம்... கழுகுகள் நிலைகளுக்குத் திரும்பலாம்" என்ற கட்டளை வேடனிடம் இருந்து அனைவருக்கும் கிடைத்தது.

அலிகவை கதிரையில் இருந்து எழுப்பி அழைத்துச் செல்லத் தொடங்கினர் புலனாய்வாளர்கள்... அவன் மிக உறுதியாக அவர்களுடன் நடந்து சென்றான்... அவனது மனைவியோ அந்த வீட்டில் தனியாக நின்றாள்....... (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு

கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கி வைத்தார். இந்நிகழ்வு கடந்த முதலாம் திகதி முதல்வர் அலுவலகத்தில் நடைபெற்றது. விளையாட்டு வீரர்களிடையே சிறந்த சமூக பண்புகளை உருவாக்கவல்ல விளையாட்டுத் துறையினை ஊக்குவிக்கும் வகையில் மேற்படி விளையாட்டு உபகரணங்கள் முதல்வரினால் வழங்கிவைக்கப்பட்டது. இதன்போது கல்முனை லெஜன்ட் விளையாட்டுக்கழகத்தின் 100ஆவது போட்டித் தொடருக்கான விசேட இலட்சனை மாநகர முதல்வரினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்முனை லெஜன்ட் விளையாட்டுக் கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.




## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேச செயலகத்திலுள்ள உதயதாரகை விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கடந்த இரண்டாம் திகதி வழங்கப்பட்டன. ஜனாதிபதியின் ஆலோசகரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தனின் நிதியெதுக்கீட்டில் இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் ஆலோசகரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளருமான பூ.பிரசாந்தன், பிரதேச செயலாளர் எஸ்.வில்வரட்ணம் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கறுப்பின வீரர்களுக்கான ஒதுக்கீட்டு முறையை அறிமுகப்படுத்துகிறது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்க உள்ளூர் அணிகளில் கறுப்பின வீரர்களை உள்ளடக்குவதற்கான திட்டங்கள் குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வாக்கெடுப்பொன்றை மேற்கொண்டுள்ளது. அத்தோடு, இந்தத் திட்டம் வாக்கெடுப்பில் வெற்றிபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒக்டோபர் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் கூட்டத்திலேயே இது தொடர்பான வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ளது. இதன்படி, பிரான்சிஸ் அணிகள் தங்கள் அணியில் தலா 2 கறுப்பின வீரர்களையும், மாகாண அணிகள் 3 கறுப்பின வீரர்களையும் கட்டாயமாக உள்ளடக்க வேண்டுமென திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டு இன ரீதியிலான ஒதுக்கீட்டு முறையை தென்னாபிரிக் கிரிக்கெட் சபை, அதன் மூலம் ஒவ்வொரு அணியும் 4 வெள்ளையற்ற வீரர்களை களமிறக்க வேண்டுமெனத் தெரிவித்திருந்தது. இந்த நடைமுறை 2007ஆம் ஆண்டு நீக்கப்பட்டிருந்தது. வெள்ளையற்ற வீரர்களில் கறுப்பின வீரர்களல்லாத ஏனைய வீரர்கள் இடம்பெற்ற போதிலும், கறுப்பின வீரர்களின் பங்கு குறைவானதாகவே காணப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே இந்த நடைமுறை குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை ஆராய்ந்துள்ளது. 1991ஆம் ஆண்டின் பின்னர் ஐந்து கறுப்பின வீரர்கள் மாத்திரம் டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்கா சார்பாக விளையாடியுள்ளதுடன், மக்காய இன்ரினி மாத்திரமே 20 டெஸ்ட் போட்டிகளுக்கு அதிகமாக விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்திரேலியா தொடரை இந்தியா வெல்லும்: லட்சுமணனின் கணிப்பு

"ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றும்," என, முன்னாள் வீரர் லட்சுமணன் கணித்துள்ளார். இந்தியா வரவுள்ள ஆஸ்திரேலிய அணி, ஒரே ஒரு சர்வதேச T20 மற்றும் ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. T20 போட்டி வரும் அக்டோபர் 10ம் தேதி ராஜ்கோட்டில் நடக்கிறது. ஒருநாள் தொடரின் முதல் போட்டி புனேயில் அக்டோபர் 13ல் நடக்கிறது. இத்தொடர் குறித்து, முன்னாள் இந்திய வீரர் லட்சுமணன் கூறியது: ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்ற அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்திய அணியில் திறமையான இளம் வீரர்கள் நிறைய உள்ளனர். இத்தொடர், இளம் வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த உதவும். யுவராஜ் சிங், இந்திய அணியில் மீண்டும் இடம் பிடித்தது எதிர்பார்த்த ஒன்றுதான். இவரை போன்ற திறமையான வீரர்களுக்கு, நீண்ட நாட்கள் அணியில் இடம் கொடுக்காமல் இருக்க முடியாது. முந்தைய போட்டிகளில் இந்திய அணியின் வெற்றிக்கு இவரது செயல்பாடு முக்கிய பங்குவகித்தன. சமீபத்தில் முடிந்த வெஸ்ட் இண்டீஸ் 'ஏ' மற்றும் சாலஞ்சர்ஸ் டிராபி தொடரில் திறமையை நிருபித்ததன் மூலம், எளிதாக அணியில் இடம் பிடிக்க முடிந்தது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்குவகிப்பார் என நம்புகிறேன். இவ்வாறு லட்சுமண் கூறினார்.

# முஸ்லிம் காங்கிரஸின் போக்கும் அதன் தலைமையும்

01

நடந்து முடிந்த மூன்று மாகாண சபை தேர்தல் முடிவுகளின் படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வாக்கு வங்கி சரிவடைந்துள்ளதை தெட்டத்தெளிவாக காணமுடிகின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 04 மாவட்டங்களில் 04 ஆசனங்களை பெற்றிருந்தாலும் கூட முஸ்லிம் காங்கிரசின் வாக்கு வங்கியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை இங்கு தெட்டத்தெளிவாக அறியமுடிகின்றன.

எமது ஆசனத்தை நாம் தக்க வைத்துள்ளோம் யாருடனும் கூட்டுச் சேராமல் சுதந்திரமாக 04 ஆசனங்களை பெற்றிருக்கின்றோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறினாலும் கூட யதார்த்தில் முஸ்லிம் காங்கிரசின் வாக்கு வங்கியில் ஒரு பலமான சரிவு ஏற்பட்டுள்ளதை தேர்தல் பெறுபேறுகளில் இருந்து விளங்க முடிகின்றது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு சரிவு ஏற்பட்டுள்ளதை உணர்ந்து கொண்டு அதை சரி செய்ய முற்படாவிடில் எதிர் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது என்ன நிலை தோன்றியுள்ளதோ அதே நிலைமைதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வடமாகாணத்தின் வன்னி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 12,783 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் காலம் சென்ற மர்ஹூம் நூர்தீன் மசூர் 9,518 வாக்குகளை பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

ஆனால் நடைபெற்று முடிந்த வடமாகாண சபை தேர்தலில் முழு வட மாகாணத்திலுமே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6,761 வாக்குகளை மாத்திரமே பெற்றுள்ளது. இந்த மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினை விட 65 வாக்குகள் வித்தியாசத்தில் றிமைனிங் எனப்படும் மிகுதியான வாக்குகளின் அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு இங்கு ஒரு ஆசனம் கிடைத்தது.

இந்த 65 வாக்குகளும் ஐக்கிய மக்கள் சுத்திர முன்னணிக்கு போய் இருந்தால் முஸ்லிம் காங்கிரசுக்கு ஆசனம் கிடைக்காமல் அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே போய் இருக்கும் என்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

அதேபோன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஐக்கிய முன்னணியில் 2004 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு 15,837 வாக்குகளை பெற்றிருந்தது. இந்த வாக்குகளை இந்த தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற வாக்குகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் இந்த முறை வன்னி மாவட்டத்தில் மு.காவுடைய வாக்கு வங்கியில் சரிவு நிலை ஏற்பட்டுள்ளதை இங்கு எடுத்துக்காட்டுகின்றது.

அதே போன்றுதான் மத்திய மாகாணத்தில் மு.காவுக்கு பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக கண்டி மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அமைச்சர் றஊப் ஹக்கீமுக்கு 54,047 வாக்குகள் கிடைத்தன. ஆனால் இந்த மாகாண சபை தேர்தலில் கண்டி மாவட்டத்தில் 11,137 வாக்குகளே கிடைத்துள்ளன.

கண்டி மாவட்டத்தில் அதிகம் முஸ்லிம் வாக்காளர்களை கொண்ட அக்குறனை பிரதேசத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் 15,000 வாக்குகளை மு.காவின் தலைவர் றஊப் ஹக்கீம் பெற்றிருந்தார். அதேபோன்று அக்குறனை பிரதேச சபை தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் 6,175 வாக்குகளை பெற்றிருந்தது. ஆனால் இம் முறை இப்பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரசுக்கு 1,700 வாக்குகளே கிடைத்துள்ளன.

இதே போன்று கண்டி மாவட்டத்தின் பாத்தத்தும்பறை தேர்தல் தொகுதியில் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் மக்கள் மு.காவுக்கு வாக்குகளை அளிக்காமல் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட ஆசாத் சாலிக்கு தங்களின் வாக்குகளை போட்டு அதி கூடிய விருப்பு வாக்குகளினால் ஆசாத் சாலியை வெற்றிபெற வைத்துள்ளதுடன் மு.காவையும் அதன் தலைமையையும் தோக்கடித்துள்ளதையும் அக்கட்சியின் வாக்குகள் சரிந்துள்ளதையும் தேர்தல் முடிவுகளின்படி அதன் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றது.

இருந்தும் கண்டி மாவட்ட வரலாற்றில் கண்டி மாவட்ட முஸ்லிம்கள் இம்முறை அதிகளவு வாக்களிப்பில் அக்கறை காட்டியது இந்த தேர்தலில்தான். இதில் முஸ்லிம்கள் 85 சதவீதமானோர் வாக்களித்திருந்தனர். இவ்வாறு வாக்களிக்கப்பட்டதின் படி சுமார் 75,000 வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் 18,000 வாக்குகளை, மு.காவுக்கு 11,137 வாக்குகளையும் வழங்கியுள்ளனர்.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட அஸாத் சாலிக்கு மாத்திரம் 55,385 விருப்புவாக்குகளை அளித்து மக்கள் ஆணை வழங்கியுள்ளதை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். குறிப்பாக கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் பெண்கள் அதிகளவு வாக்களிப்பில் இம்முறை ஆர்வம் காட்டியதால் இம்முறை இடம்பெற்ற தேர்தலில் மூலம் இந்த வாக்கு வீதம் அதிகரித்திருந்தது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் அமைச்சர் றஊப் ஹக்கீம் முழு கண்டி மாவட்டத்திலுமாக 54,047 வாக்குகளை பெற்றிருந்தார். ஆனால் இம் முறை 11,137 வாக்குகளை மட்டுமே மு.கா பெற்றுள்ளது. இது முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு பாரிய பின்னடையும், ஒரு சவாலையும் ஏற்படுத்தியுள்ளது.

**மீனோடைக்காட்டு**
**எம். பைசஷல் இஸ்மாயில்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக் கடல் வளத்தைக் கொன்று கடலில் இடும் இந்தியா

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களால் பயன்படுத்தப்படும் சட்டவிரோத நடைமுறைக்கு ஒவ்வாத வெளிப் படுத்தப்படாத மீன்பிடி முறைகளால் பிடிக்கப்படும் மீன்களில் சுமார் 30 வீதமான மீன்கள் பழுதடைந்து விடுகின்றன எனத் தெரியவருகின்றது.

"நிலத்தடி வருடல்" (Bottom Trawling) மீன்பிடி முறையானது இலங்கை மற்றும் இந்தியாவில் தடுக்கப்பட்டுள்ள நிலையில் மத்திய அரசின் பாதுகாப்புடன் தமிழ்நாட்டு அரசின் பங்களிப்புடன் மீனவர்கள் எல்லை தாண்டி வருகின்றனர்.

இவ் அத்துமீறலால் சுமார் 8 மில்லியன் ரூபா வருமானத்தை இலங்கை ஆண்டுதோறும் இழந்து வருகின்றது.

# the SUNDAY TIMES

## இரட்டை நிலைப்பாட்டில் ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கை குற்றச்சாட்டு –

சட்டவிரோத நடைமுறைக்கொவ்வாத வெளிக்காட்டப்படாத மீன்பிடி முறைகளை பயன்படுத்தி இலங்கை மீன்பிடியில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டியுள்ள ஐரோப்பிய ஒன்றியம், தமிழ்நாடு அவ்வகை மீன்படி நடவடிக்கையில் ஈடுபடுவதைக் கண்டும் காணாது இருப்பதாக குற்றஞ் சாட்டியுள்ளது. இவ்வகை மீன்பிடி நடவடிக்கையை தனது கடற்பரப்பில் இந்திய மேற்கொண்டால் அதைப்பற்றி இலங்கை பொருட்படுத்தப் போவதில்லை. ஆனால் இலங்கைக் கடற்பரப்பில் இவ்வகை நடவடிக்ககைகள் இடம்பொறுவதையிட்டு ஏன் ஐரோப்பிய ஒன்னியம் அமைதிகாக்கின்றது என இலங்கை கேள்வி எழுப்பியுள்ளது.

## ஆஸ்திரேலிய சூதாட்ட மன்னனுக்கு இலங்கை அமைச்சரவை பச்சைக்கொடி

தனது ஒன்றிணைக்கப்பட்ட உல்லாச வடுதி திட்டத்தை இலங்கையில் உருவாக்கும் முயற்சியில் ஆஸ்திரேலிய சூதாட்ட விடுதி மன்னன் "பாஸ்கர்" மேலும் ஒரு படிக்கல்லை தாண்டியுள்ளார்.

இத்திட்டத்தை இலங்கையில் முன்னெடுக்கும் போது அவர் தொடர்ச்சியாக வரி விடுதலையை அனுபவிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. முழு அனுமதிக்காக இத் திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெற்கில் "சஜித் பிரேமதாசவை" நிறுத்துக

தெற்கில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாராக சஜித் பிரேமதாசவை நிறுத்த வேண்டும் எனக் கோரும் கோரிக்கையை ஐ.தே.க வின் மாத்தறை மாவட்ட ஒழுங்கமைப்பாளர் குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது. மங்கள சமரவீரவின் தலைமையில் கூடிய குழுவே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டும் – த.தே.கூ

வடமாகாண சபைத் தேர்தலில் பெருவெற்றியீட்டியுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தாம் பதவியேற்கும் சத்தியப் பிரமான நிகழ்வினை யாழ்ப்பாணத்தில் நடாத்தும்போது சனாதிபதி அங்கு வரவேண்டும் எனக் கோரியுள்ளனர்.

த.தே.கூட்டமைப்பினர் ஆளுனரின் முன் சத்தியப்பிரமாணம் செய்ய விருப்பமற்றிருப்பது தெரிந்ததே. அதனால் சனாதிபயை சத்தியப்பிரமான நிகழ்வுக்கு அழைத்து ஆளுனரைத் தவிர்க்கவே இவ் ஏற்பாடு நிகழ்கிறது.



# SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

## "ஐ.ம.சு.கூ எதிர்காலத்தில் வடக்கில் மேலும் வாக்கினைப் பெறும்"

வடக்கின் தேர்தலில் சுமார் 83,000 வாக்குகளைப் பெற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி எதிர்காலத்தில் மேலும் பல வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் என்று அமைச்சர் சுசில் பிரேம ஜெயந் தெரிவித்துள்ளார். வடக்கில் போட்டியிட்ட ஐ.தே.க சுமார் 895 வாக்குகளை யாழ்ப்பாணத்திலும் மொத்தமாக 3000 வாக்குகளை வடக்கு மாகாணம் முழுவதிற்குமாகப் பெற்றுக் கொண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். இறுதி பாராளுமன்ற தேர்தலில் ஒரு பாராளுமன்ற அங்கத்தவரை யாழ்ப்பாணத்தில் இருந்து பெற்றுக் கொண்ட ஐ.தே.க வால் வெறும் 3000 வாக்குகளையே தற்போது பெறமுடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இதன்படி வடக்கில் போட்டியிட்ட புதிய கட்சியான தமக்கு 7 ஆசனங்கள் முதலாவது தேர்தலிலேயே கிடைத்திருப்பது எமக்கு நம்பிக்கை தருகிறது என அவர் கூறியுள்ளார்.

## அதிக உப்பு குறைந்த ஆயுள்

கூடியளவு உப்பை நுகர்பவர்களின் ஆயுட்காலம் குறைவாக இருப்பதாக சுகாதார அமைச்சு அறிக்கையிட்டுள்ளது. 3 தொடக்கம் 5 கிராம் நிறையுள்ள உப்பே நாளொன்றுக்கு மனிதன் நுகரக்கூடிய பொருத்தமான அளவு என சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இலங்கையின் இளைஞர்கள் நாளொன்றுக்கு 12.5 கிராம் நிறையுள்ள உப்பை நுகர்கின்றனர் என அவ்வறிக்கை வெளிக்காட்டுகின்றது.




## த.தே.கூ விற்கான மக்கள் ஆணை தமது வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளவே

வடக்கில் பதியப்பட்ட த.தே.கூ வின் வெற்றியானது அம் மக்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க வேண்டும் என மனிதவள அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார். த.தே.கூட்டமைப்பின் தலைவர் இதனைப் புரிந்து கொண்டு செயற்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். கடந்த மூன்று தசாப்தங்களாக தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்களை த.தே.கூ தமது மனதில் நறுத்திச் செயற்படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். தமது கலாசார, மொழி மற்றும் நாளாந்த விடையங்களைக் கொண்டு நடத்தவும் விருத்தி செய்யவுமே த.தே.கூட்டமைப்பபை வடக்கு மக்கள் தேர்வு செய்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நவி பிள்ளையின் வாய்மொழி மூல அறிக்கையை எதிர்க்கும் பல நாடுகள்

ஐ.நா வின் மனித உரிமைச் சபையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூட்டத்தில் இலங்கைக்கு முன்னெப்போதுமில்லாத ஆதரவை வழங்கப் பல நாடுகள் முன்வந்துள்ளன. கடந்த வாரம் இலங்கை தொடர்பாக உரையாற்றிய நவி பிள்ளை அவர்களின் உரையைக் கடுமையாக விமர்சித்துள்ள அந்நாடுகள் இவ்வாதரவை இலங்கைக்கு தெரிவித்துள்ளன. ரஷ்யாவின் பதிலடியானது அரசியல் இலாபங்களைத் திரட்டவும் பூகோள அரசியல் ஆதிக்கத்தைப் பேணவும் மனித உரிமைப் பேரவையைப் பயன்படுததுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவிக்கின்றது.



# The Sunday LEADER

## சண்டைக் கோழியாக கனடா

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பான முடிவுகளை கனடா வெளியிட்டது. இலங்கையில் நடைபெறும் இம் மாநாட்டில் தனது முழுமையான அணியை அனுப்பப்போவதில்லை என கனடா தெரிவித்துள்ளது. இம்முடிவில் தாம் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ள கனடா இலங்கை தொடர்பான தமது நடவடிக்கைகளில் மாற்றம் எதுவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

## தெற்கில் த.தே.கூ போட்டியிடலாம்

வடக்கில் பெற்றுக் கொண்ட வெற்றியை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெற்கிலும் போட்டியிடும் முடிவில் இருப்பதாகத் தெரிகின்றது. தெற்கிலுள்ள தமிழர்கள் த.தே.கூட்டமைப்பிற்கே ஆதரவளிப்பர் எனத் தனது ஆரூடத்தை அக் கட்சியின் சுமந்திரர் பா.ம.உ வெளியிட்டார். வடக்கில் தமது பெரும் ஆதரவை வெளியிட்ட தமிழ் மக்களைப் போலவே தெற்கு மட்டுமல்ல ஊவா மற்றும் மேல்மாகாணத் தமிழ் மக்களும் த.தே.கூட்டமைவின் விஞ்ஞாபனத்திற்கு பெரும் வரவேற்பை தருவார்கள் என்று சுமந்திரர் மேலும் தெரிவித்தார்.

## முன் மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படும்

வெலிக்கடைச் சிறைச்சாலைத் தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிட்டுள்ள ஆணைக்குழுவால் முன்மொழியப்பட்டுள்ள 17 விடையங்களையும் நடைமுறைப் படுத்தவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனருத்தாரண அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை சிறைக்காவலுக்கு தேவையான ஆயுதங்களை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சரிடம் கோரியுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## மாகாண சபை உறுப்பினருக்கான வாகன உறுதிப்பத்திரம் நீக்கம்

வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை மாகாண சபை உறுப்பினருக்கு வழங்குவதில்லை எனும் முடிவை அரசு எடுத்துள்ளது.

அடுத்துவரும் 2 1/2 வருடங்களுக்கு இவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

இதன்படி சுமார் 145 மாகாண சபைஉறுப்பினர்களுக்கு இவ் அனுமதி கிடைக்காமல் போயுள்ளது.

## இந்திய அகதிகளின் வருகைகளில் வீழ்ச்சி

இலங்கைக்கு தப்பிவரும் இந்நிய அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை அவதானிப்பதாக புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது சுமார் 102,000 தமிழர்கள் அகதிகளாக வாழ்வதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் நாட்டிற்கு திரும்பஅக்கறை காட்டவில்லை என்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பொதுமக்கள் முன்னிலையில் தடியடி

குழந்தைகளை வன்முறைக் குள்ளாக்குபவர்க்கு பொதுமக்கள் முன்னிலையில் தடியடி வழங்கும் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிப்பதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இம் முன்மொழிவைப் பாராளுமன்றத்திலும், நீதி அமைச்சிலும் வழங்கவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னர் மரண அல்லது ஆயுள் தண்டனையை வழங்கவே தான் முன்மொழிந்ததாகவும் அத்தண்டனை களுக்கு உணர்ச்சிபூர்வ எதிர்ப்பு இருப்பதனால் அதனை விடுத்து புதிய தண்டனைகளை தாம் முன்மொழிவதாக அவர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 09

01. $aCu + 8HNO_3 \rightarrow aCu(NO_3)_2 + 2NO_2 + 4H_2O$
$a$ இன் பெறுமானம் என்ன?
1. 1 2. 2 3. 3 4. 4

02. $1 moldm^{-3}$, $2 moldm^{-3}$, $3 moldm^{-3}$ செறிவுடைய ஐதரோ குளோரிக் அமிலத்தின் சம கனவளவுகள் அறை வெப்பநிலையில் எடுக்கப்பட்டு முகவையினுள் தனித்தனியே இடப்பட்டு முகவையின் அடியில் '$x$' புள்ளடி போடப்பட்டு வைக்கப்பட்டது. அவற்றினுள் தனித்தனியாக 0.001 $moldm^{-3}$ செறிவுடைய சோடியம் தயோசல்பேற்றில் 6 துளிகள் இடப்பட்டது. இதன்போது புள்ளடி மறைய எடுத்த நேரம் $t_1$, $t_2$, $t_3$ செக்கன்கள். $t_1$, $t_2$, $t_3$ பற்றிய சரியான கூற்று எது?
1. $t_3 \rangle t_2 \rangle t_1$ 2. $t_1 \rangle t_3 \rangle t_2$ 3. $t_1 = t_3 = t_2$ 4. $t_1 \rangle t_2 \rangle t_3$

03. கல்சைற், தொலமைற் ஆகிய இரண்டிலும் பொதுவாக காணப்படாத மூலகம் எது?
1. $Ca$ 2. $C$ 3. $Mg$ 4. $O$

04. சோடா அமில தீயணை கருவிகளில் உருளை, போத்தலில் காணப்படும் இரசாயன பதார்த்தங்கள் எவை?
1. $NaHCO_3$, $Al_2(SO_4)_3$ 2. $NaHCO_3$, ஐதான $H_2SO_4$
3. $NaHCO_3$, செறி. $H_2SO_4$ 4. ஐதான $H_2SO_4$, $NaHCO_3$

05. $A$ ஆனது 2 ஆம் ஆவர்த்தனத்தை சேர்ந்த மூலகமாயின் இன் அணு எண் யாது?



1. 10 2. 8 3. 7 4. 6

06. பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது?
1. சோடியம் குளோரைட் பளிங்கு மின்னைக் கடத்தும்
2. உருகிய சோடியம் குளோரைட்டை மின்பகுத்து சோடியத்தை பெறலாம்.
3. ஐதான சோடியம் குளோரைட் கரைசல் மின்னைக் கடத்தாது.
4. சோடியம் குளோரைட் கரைசலினுள் $Na^+$, $Cl^-$ அயன்கள் மட்டுமே காணப்படும்.

07. $X$, $Y$, $Z$ ஆகிய உலோகத் தகடுகள் $CuSO_4$, கரைசலினுள் வைத்து அவதானிக்கப்பட்டது. $X_{(s)} + CuSO_{4(aq)} \rightarrow$ மாற்றமில்லை
$Y + MgSO_4 \rightarrow$ மாற்றமில்லை $Z + CuSO_4 \rightarrow ZSO_4 + Cu\downarrow$
$X$, $Y$, $Z$ பற்றிய எம்முடிவு மிகவும் உண்மையானது?
1. $X$ தாக்கவீத தொடரில் $Ag$ கீழேயுள்ளது.
2. $Y$ தாக்கவீத தொடரில் $Cu$ கீழேயுள்ளது
3. $Z$ தாக்கவீத தொடரில் $Cu$ மேலேயுள்ளது.
4. மேற்கூறிய எல்லா முடிவுகளும் உண்மையானவை.

08. நேர்கோட்டியக்க சமன்பாடுகளில் தவறானது எது?
1. $S = ut + at^2$ 2. $V = u + at$ 3. $V^2 = u^2 + 2as$
4. $S = \frac{(V+u)t}{2}$

09. மோட்டார் வண்டி ஒன்றின் நேர்கோட்ட இயக்கத்திற்கான வேக நேர வரைபை படம் காட்டுகின்றது. $\frac{1}{2}$ மணி நேரத்தின் பின்னர் சென்ற தூரம் $m$ இல் யாது?



1. $40m$ 2. $2400m$ 3. $160000 Km$ 4. $240000 m$

10. கூர்ப்பு நடைபெறும் விதத்தை விளக்குவதற்கு டாவின் எடுத்துரைத்த இயற்கைத் தேர்வுக் கொள்கையின் நான்கு படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றின் சரியான ஒழுங்கு முறையைக் காட்டும் விடை யது?
அ. தக்கன பிழைத்தல் ஆ. மாறல்
இ. மிகையுற்பத்தி ஈ. போட்டி
1. அ, ஆ, இ, ஈ 2. ஆ, இ, அ, ஈ 3. இ, ஆ, ஈ, அ
4. ஆ, ஈ, அ, இ

11. திரவம் ஒன்றினுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்திற் செல்வாக்குச் செலுத்தாத காரணி எது?
1. திரவத்தின் அடர்த்தி 2. திரவத்தின் கனவளவு
3. ஈர்வையினாலான ஆர்முடுகல்
4. சுயாதீன மேற்பரப்பில் இருந்து அப்புள்ளியின் ஆழம்

### பாடம் - கணிதம், 09

பகுதி 01

1. ஒரு கூட்டல் விருத்தியின் $n$ ஆம் உறுப்பு $T_n = 3n + 2$ எனின்,
   1. இத்தொடரின் முதல் மூன்று உறுப்புக்களை எழுதுக.
   2. இத் தொடரின் 50ம் உறுப்பைக் காண்க.
   3. 101 இத்தொடரில் உள்ள் உறுப்பாகுமா?
   4. இத் தொடரின் முதல் 50 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

2. நேர் விளிம்பு, கவராயம், $cm/mm$ அளவுகோல் ஆகியவற்றைப் பயன்படுத்தி
   1. $PQ = 6.2cm$, $Q\hat{P}R = 75^\circ$, $P\hat{R}Q = 45^\circ$ முக்கோணம் $PQR$ இனை அமைக்க.
   2. $PR$ இன் நீளத்தை அளந்து எழுதுக.
   3. $QS = RS$ ஆகுமாறு $s$ ஆனது $QR$ இற்கு $P$ இருக்கும் பக்கத்திற்கு எதிர்புறமாக இருக்குமாறும் $R\hat{Q}S = 45^\circ$ ஆகவும் உள்ள புள்ளி $s$ இல் குறிக்க.
   4. நாற்பக்கல் $PQSR$ ஐ பூரணப்படுத்துக.
   5. நாற்பக்கல் $PQSR$ இன் விசேட பெயர் என்ன?

3. நிறுவனமொன்றின் பணியாளர்கள் 120 விவசாயிகளிடம் அவர்கள் பயிரிடும் பயிர் வகைகள் பற்றி சேகரிக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு. 65 விவசாயிகள் புகையிலையும், 91 விவசாயிகள் வெங்காயத்தையும், 53 விவசாயிகள் மிளகாயையும் பயிரிடுகின்றனர். மிளகாய் பயிரிடும் அனைவரும் வெங்காயம் பயிரிடுகின்றனர். 30 விவசாயிகள் மூன்று வகை பயிர்களையும் 23 விவசாயிகள் புகையிலையை மட்டும் பயிரிடுகின்றனர்.
   1. மேற்குறித்த தகவலை வென்னுருவில் காட்டுக?
   2. புகையிலை, வெங்காயம் ஆகிய பயிர்களை மட்டும் பயிரிட்ட விவசாயிகள் எத்தனை சதவீதத்தினர்?
   3. வெங்காயத்தை மட்டும் பயிரிட்டவர்களின் எண்ணிக்கையை வெங்காயம் பயிரிடுபவர்களின் பின்னமாகத் தருக.
   4. எழுமாறாக விவசாயி ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் இம் மூன்று பயிர்களையும் பயிரிடாதவராக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

4. சைக்கிள் ஓட்ட வீரன் ஒருவன் தனது பயிற்சியின் போது 1 ஆவது செக்கனில் 4மீ தூரமும் 2 ஆவது செக்கனில் 7மீ தூரமும் 3ஆவது செக்கனில் 10மீ தூரமும் என்றவாறு தனது வேகத்தை அதிகரிக்கின்றான். இவ்வாறு 12 செக்கன்கள் தொடர்ச்சியாக ஓடிய வீரன் 15 ஆவது செக்கன் முடிவில் சடுதியாக ஓய்வுக்கு வருகின்றான்.
   1. ஓர் விருத்தியை அமைக்குக.
   2. இவ்வீரன் 15 ஆவது செக்கனில் ஓடிய தூரம் யாது?
   3. 15 செக்கன்களில் ஓடிய மொத்தத் தூரம் யாது?
   4. இவ் ஓட்டவீரனின் சராசரிக் கதியை $m/s$ இலும் $Km/h$ இலும் தருக.

5. குறித்த இரு இலக்கை சுட்டு வீழ்த்தும் போட்டியில் சுரேஷ், றஞ்சன் ஆகிய இருவரும் சுட்டு வீழ்த்துவதற்குரிய நிகழ்தகவுகள் முறையே $3/5$, $4/7$ ஆகும்.
   1. இவர்கள் இருவரிலும் சுட்டு வீழ்த்துவதற்குரிய சாத்தியக்கூறை அதிகமாகக் கொண்டவர் யார்?
   2. சுட்டு வீழ்த்துவதற்குரிய நிகழ்தகவுகளைக் காட்டும் மரவரிப்படம் ஒன்றை வரைக.
   3. இரண்டு இலக்கையும் சுரேஸ் சுட்டு வீழ்த்துவதற்கான நிகழ்தகவு

6.
   1. காரணிப்படுத்துக. $4a^2 - 9$
   2. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. $\sqrt{(12\sqrt{2} + \sqrt{3})(3\sqrt{2} - \sqrt{3})}$
   3. பின்வரும் அட்சரகணித கோவையின் பொ.ம.சி காண்க? $x^2 - 5x$, $x^2 - 2x - 15$
   4. சுருக்குக. $\frac{8}{x^2 - 2x - 15} - \frac{5}{x^2 - 5x}$

7.
   1. தீர்க்குக. $4^x = \frac{1}{32}$
   2. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாது இன் பெறுமானங்களைக் காண்க. $2\log x - \log\left(\frac{5}{2}\right) = 1$
   3. மடக்கை அட்டவணையை உபயோகித்து இப்பெறுமானத்தை இரண்டு தசமதானங்களுக்கு திருத்தமாக காண்க? $\frac{91.6 \times \sqrt{3.451}}{2.713^3}$

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்

குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியன்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 10 பாடம் - வரலாறு

**வினா 04**

*1215ம் ஆண்டு கலிங்கமாகானின் படையெடுப்பினால் இலங்கையின் நீர்வளநாகரிகம் சீரழிந்து போனதுடன் பொருளாதார கோலமும் மாற்றத்திற்கு உள்ளானது.*

1. கலிங்கமாகனிடம் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு பிரதேச ஆட்சியாளர்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி நிலையங்கள் மூன்றை தருக.

2. அ. இராஜபுத்திர வீரர்களின் துணையுடன் ஆட்சியுரிமையைப் பெற்றுக்கொள்ளல்
   ஆ. போதிமாபா என்பவனின் கிளர்ச்சியால் ஆட்சியை இழத்தல்
   இ யாழ்ப்பாணம் சென்று ஆரியச்சக்கரவர்த்திகளின் அதிகாரத்தை ஒழித்தல்
   ஈ. மன்னாரிலிருந்து பாணந்துறை வரையிலான பகுதியை ஆரியச் சக்கரவர்த்தியிடமிருந்து விடுவித்தல்

3. இலங்கையில் கோட்டை ஆட்சியாளர்களில் 6ம் பராக்கிரமபாகு முக்கியத்துவம் பெறுகிறான் என்பதை இரு விடயங்கள் ஊடாக விளக்குக.

4. 13ம் நூற்றாண்டின் பின் இராசதானி தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தது இதற்கு காரணமாக அமைந்த மூன்று விடயங்களை விளக்குக.

**வினா 05**

1. இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆட்சியாளர்கள் மூவரைத் தருக.

2. அ - இலங்கையின் முதல் கத்தோலிக்க மன்னனாதல்
   ஆ - முல்லேரியாப்போரை தலைதாங்கி சென்று போர்த்துக்கேயரை தோற்கடித்தல்
   இ - கி.பி 1766 உடன்படிக்கையின் ஊடாக ஒல்லாந்தருக்கு கரையோர அதிகாரத்தை வழங்கல்

3. யாழ்ப்பாண இராசதானியின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த விடயங்களை இரண்டின் துணையுடன் விபரிக்குக.

4. இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியினால் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை மூன்று விடயங்களைக் கொண்டு உதாரணத்துடன் விளக்குக.

**வினா 06**

1. அ - இலங்கையின் கரையோர நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்ட முதல் பிரித்தானிய ஆளுநர்
   ஆ - 1840ல் தரிசு நிலச்சட்டத்தை அறிமுகம் செய்த ஆளுனர்
   இ - 1915ல் சிங்கள - முஸ்லீம் கலவரத்தின் போது ஆளுனர்

2. பிரித்தானியருக்கு எதிராக இலங்கையின் கரையோரத்தில் இடம்பெற்ற கிளர்ச்சிக்கு காரணமாக அமைந்த இரண்டு காரணிகளை குறிப்பிடுக.

3. பிரித்தானியர் இலங்கையை கைப்பற்ற காரணமாக அமைந்த விடயங்கள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக.

4. பிரித்தானியர் கண்டியை கைப்பற்ற கண்டி இராசதானியில் காணப்பட்ட அரசியல் குழப்பங்களே காரணமாகும். இக்கூற்றை மூன்று விடயங்கள் கொண்டு விபரிக்குக.

**வினா 07**

அ - மூன்றாவது பேரவை மாநாட்டை நடத்துதல்
ஆ.- மகா அலெக்சாண்டரின் படையெடுப்பை எதிர்கொள்ளல்
இ - நந்தவம்ச ஆட்சியை ஒழித்து மௌரியப் பேரரசை நிறுவுதல்

மேற்படி அ, ஆ, இ விடயங்களுடன் தொடர்புடையவர்களை தருக

2 - கி.பி 6ம் நூற்றாண்டில் உருவான பதினாறு குடியேற்றங்கள் பலம் பொருந்திய இராச்சியங்கள் நான்கையும் தருக.

3 - இந்தியாவில் ஆரியர் தமது குடியிருப்புக்களை அமைக்கையில் கருத்தில் கொண்ட விடயங்கள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

4 - குப்த பேரரசு வீழ்ச்சிக்கு கரணமான விடயங்கள் மூன்றை விளக்குக.

**வினா 08**

அ - பிரான்சியப் புரட்சியை நடத்துவதற்கு துணைநின்ற தத்துவஞானிகள் மூவரையும் தருக.

ஆ - பிரான்சியப் புரட்சிக்கு காரணமாக அமைந்த விடயங்கள் இரண்டை குறிப்பிடுக.

இ - ஜேர்மனி, இத்தாலி ஒன்றிணைவதற்கு நெப்போலியன் பொனபார்ட்டின் செயற்பாடுகள் காரணமாக அமைந்த விதத்தை சுருக்கமாக விளக்குக.

ஈ - இத்தாலி ஒன்றிணைவதற்கு பின்வரும் நபர்களால் ஆற்றப்பட்ட பணிகளை சுருக்கமாக விளக்குக.
1. ஜோசப்மசினி 2. கரிபால்டி 3. கவுண்கவூர்

**ஆசிரியர் :**
**த. அகிலன்,** Dip. in Tech (Mech)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 04

பிரதீபா

**01. பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சி பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா

அ. இங்கு இடம்பெற்றுள்ள உயர்திணை, ஒருமை, தன்மை, பெயர்ச்சொல் யாது? ....................
ஆ. இங்கு விபரிக்கப்படும் பிராணி எது? ....................
இ. இங்கு இடம்பெற்றுள்ள அடுக்குமொழி யாது? ....................
ஈ. "உடல்" என்பதன் ஒத்தகருத்துச் சொல் எது? ....................
உ. "அம்மா" என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக....................
ஊ. இங்கு காணப்படும் இணைமொழி எது? ....................
எ. இப்பாடலில் வந்துள்ள அடைமொழிச் சொல் ஒன்றை தருக. ....................
ஏ. இப்பாடலில் உள்ள உவமைத் தொடரை எழுதுக. ....................

**02. கீழ்வரும் தொடர் மொழியைக் குறிக்கும் ஒரு சொல்லை தருக.**
அ. சூரியனையும், சந்திரனையும் சூழ்ந்து தோன்றும் ஒளிவட்டம் ....................
ஆ. ஒருவர் முதன் முதல் இயற்றிய பாட்டு ....................
இ. மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை ....................
ஈ. மனைவியை இழந்த ஆண் ....................

03. 16-10-2006 சஞ்சுதனுக்கு 7 வயதாகும். எனின், சஞ்சுதனின் பிறந்த ஆண்டு, மாதம், திகதி யாது?

04. 06 டொபிகளின் விலை ரூபா 20 எனின், 3 டொபிகளின் விலை யாது?

05. 1 லீற்றர் பெற்றோலில் 25 கிலோமீற்றர் செல்லக்கூடிய ஒரு வாகனம் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு 225 கி.மீ தூரம் பயணம் செய்து தன் பிரயாணத்தை நிறுத்திக் கொண்டது. 1 லீற்றர் பெற்றோலின் விலை ரூபா 175 எனின், அப்பிரயாணத்திற்கான பெற்றோல் செலவைக் காண்க.

06. ஒரு போட்டி ஒன்று மு.ப 11.45 க்கு ஆரம்பமானது சுமார் 35 நிமிடங்களின் பின்னர் அப்போட்டி முடிவுக்கு வந்தது. அப்போட்டி முடிவடைந்த நேரம்?

07. தோடம் பழம் 2ன் விலை ரூபா 40 ஆகும். அமுதனிடம் ரூபா 55 உண்டு. அவனுக்கு 25 தோடம்பழங்கள் வாங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணம் தேவையாகும்?

08. குரக்கன் போன்ற வடிவத்தை உடைய வித்து எது?
1. மிளகு 2. கடுகு 3. நோக்குரோல் 4. பப்பாசி
09. நன்றாக நிழல் தரும் தாவரம் எது?
1. ஆலமரம் 2. புங்கைமரம் 3. தென்னைமரம் 4. அசோக்மரம்
10. வித்தை அகற்றிய பின் உணவாக சமைக்கும் காய்கறி வகை?
1. ஈரப்பலா 2. பயிற்றங்காய் 3. புடோல்
11. சித்திரை மாதத்தில் பூக்கும் மரம் எது?
1. மா 2. பப்பாசி 3. வாழை 4. வேம்பு
12. மிண்டி வேர் எனும் விஷேட வேரைக் கொண்ட தாவரம் எது?
1. குருவிச்சை 2. அரசு 3. இறுங்கு 4. ஓர்க்கிற்
13. கிராமப் புறங்களில் உணவு உண்பதற்காக பயன்படுத்தும் இலை எது?
1. தாமரை 2. புதினா 3. வட்டக்கண்ணி 4. அல்லி
14. ஆண்டிற்கு ஒரு தடவைஇலைகளை உதிர்க்கும் மரம் எது?
1. நெருப்புவாகை 2. ஆலமரம் 3. இபில்இபில் 4. மா
15. நுளம்புகளை விரட்டுவதற்கு உடலில் பூசப்படும் பதார்த்தம் எது?
1. ஆமணக்கெண்ணெய் 2. புல்லெண்ணை
3. கராம்புத் தைலம் 4. சாதிக்காய்
16. பின்வரும் தினங்கள் கொண்டாடப்படும் மாதங்களைத் தருக.
சிறுவர் தினம் ....................
ஆசிரியர் தினம் ....................
அன்னையர் தினம் ....................
தந்தையர் தினம் ....................
சுகாதாரத் தினம் ....................

பெயர்: ....................
....................
முகவரி: ....................
....................
....................
பாடசாலை: ....................

# தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 உட் துறைமுக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்ணிற்காக .....

பெனா F.M கேட்டுக் கொண்டிருக்கும் சகோதரிகளுக்கும், சகோதரர்களுக்கும் அறிவிப்பாளர் குழாத்திற்கும் இவ் ஆக்கத்தின் மூலம் என் ஸலாத்தை சந்தோசத்தோடு ஏத்திவைக்கிறேன். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு" மனிதனையும், ஜின்னையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி படைக்கவில்லை. என்று வல்லநாயம் அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகின்றான். அந்த வகையில் நபி (ஸல்) அவர்களின் உம்மத்திற்கு கலீமா, தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் ஆகிய ஐந்து அமல்களை கடமையாக்கி உள்ளான். அந்த ஐந்தில் நான்கை இப்பூவுலகில் வைத்தும் ஒன்றை மட்டும் விண்ணுலகில் வைத்தும் கடமையாக்கினான். இக்கடமையான தொழுகை மட்டும்தான் ஒவ்வொரு நாளும் ஐந்து வக்தில் நிறைவேற்றக் கூடியதாக உள்ளது. இக்கடமையை சரிவர அனைவரும் நிறைவேற்றுகின்றோமா என்பதுதான் கேள்விக் குறியாக உள்ளது. உரிய நேரத்தில் ஒவ்வொரு தொழுகையையும் நிறை வேற்றுபவர்கள் என்றும், விட்டு விட்டு தொழுபவர்கள் என்றும், அறவே தொழாதவர்கள் என்றும் மூன்று சாராராக பிரிக்கலாம். குறிப்பாக பெண்களில் சிலர் ஒரு தொழுகைக்கான நேரம் வந்து விட்டால் அந்நேரத் தொழுகையை நிறைவேற்றாமல் தனது வேலைகளை முடித்து விட்டு தொழாமலே அயல்வீட்டுப் பெண்களுடன் பேசிக் கொண்டிருப்பார்கள். அடுத்த தொழுகைக்குரிய நேரம் வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன் அத் தொழுகையை நிறைவேற்றி விட்டு இத்தொழுகையையும் நிறைவேற்று கின்றார்கள் என்று கூறக் கேட்டிருக்கின்றேன்.

அத் தொழுகையை நிறைவேற்றும் வரை உங்கள் உயிர் உடலில் இருக்கும் என்று என்ன நிச்சயம் சகோதரிகளே! சற்று சிந்தித்து பாருங்கள். நீங்கள் செய்வது சரியாக இருந்தால் தொழுகைக்கு அதான் (அழைப்பு) தேவையில்லையே! ஒவ்வொரு நாளும் தாங்கள் விரும்பும் நேரங்களில் ஐந்து தொழுகைகளையும் ஒவ்வொன்றாக நிறைவேற்றலாமே? அப்படி இருந்தால் முஸ்லிம் சமுகத்தில் ஒரு கட்டுக்கோப்பு இருக்காது தலைவர்களுக்கு கட்டுப்படும் தன்மை காணப்படாது.

## திருடர்களில் பெரும் திருடன்



இப்படி பலகுறைபாடுகள் ஏற்பட அது காரணமாக அமைந்து விடும் தொழுகையை உரிய நேரத்தில் தொழுவதுதான் சிறந்த அமல் சகோதரிகளே! அல்லாஹ்க்கு மிகவும் விருப்பமானது சிறிய அமலாக இருந்தாலும் அதைவிடாமல் தொடராக செய்து வருவதுதான். சில சகோதரிகள் விருந்தினர் வீட்டுக்கு சென்றால் அவ்வீட்டினர் தொழுபவர்களாக இருந்தால் அவர்களுக்காக இவர்களும் தொழுவார்கள் வீட்டிற்கு வந்தால் தொழமாட்டார்கள். தாங்கமுடியாத கவலை, துன்பம், நோன்பு, பெருநாள் இப்படி ஏதாவது ஒன்று வந்தால்தான் தொழுவார்கள் இல்லாவிட்டால் தொழுகையை விட்டு தூரமாகி விடுவார்கள்.

(மிகுதி அடுத்த வார முரசில்)

## உணரப்படாத தீமைகள்

நமது முஸ்லிம் சமுதாயத்தில் காலத்தைக் கழிக்கும் பெண்களின் நிலை என்ன என்பதை சற்று நோக்கினால், இன்று பொழுது போக்கு அம்சங்களாக இருப்பது சினிமா, தொலைக்காட்சி நாடகம், பத்திரிகை, மனதை தூண்டிவிடும் நாவல்கள் போன்றவைதான். வீட்டுக்குள் காலத்தை போக்கும் கன்னியர்கள் கற்பனைகளையும், பொய்யையும் மூடநம்பிக்கைகளை வளர்ப்பதையும், ஆபாசங்களுக்கு வெளிச்சம் போட்டு வியாபாரம் செய்வதுதான் இன்றைய சினிமாவும் பத்திரிகையும் செய்து கொண்டிருக்கும் பொழுது போக்கு அம்சங்கள்.

ஒரு தொடர் கதையிலே ஒரு பகுதி விடுபட்டால் தாய் - மகளிடம் இன்று என்ன நடந்தது, அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து விட்டார்களா, ஆமாம் அந்தக் கட்டம் ரொம்ப நல்லா இருந்திச்சி, அநியாயம் நீங்க தவற விட்டீங்களே. என இன்று எத்தனையோ வீடுகளில் பேசப்படுகிறது.

சமூகத்துக்கே கேவலம். ம:.ரிப் நேரத்தில் உட்கார்ந்தால் ஒரு தொடர் முடிய அடுத்த தொடர் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. உட்கார்ந்தால் எழும்ப முடியாது. எழும்பினால் அடுத்த வேலைகளைச் செய்ய முடியாது. காரணம் அந்தக் கதையில் என்ன நடந்ததோ என்ற எண்ணம். இந்த நிலையில் அதிகமான பெண்கள் காலத்தை கழிக்க, பெற்றோர் மகளுக்கு சொத்துச் சேர்க்கும் முயற்ச்சியில் மறுமை என்ற ஒன்று இருப்பதை மறந்து விட்டார்கள். ஒரு தொகைப் பணம் சேகரிக்கும் வரை திருமணம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை காரணம் அந்நியக் காலாச்சாரத்தின் மோகம். சாத்திர சடங்குகள், வரதட்சனை, சாப்பாட்டுச் செலவு என்று அனைத்துக்கும் தேவையான பணத்தொகையை சேமித்தவுடன் திருமணப் பேச்சை ஆரம்பிக்கின்றார்கள், என்னுடைய மகளுக்கு இவ்வளவு நகை போடுவேன், சீதனம் இவ்வளவு தருவேன் என்றெல்லாம் ஆண் மகன் கேட்பதற்கு முன்பே பெண்ணின் தகப்பன் அள்ளிக் கொட்டி விடுவார். இதற்கு முன்னால் இப்படி ஒரு யோசனையே இல்லாத ஆணும் இதுதான் கிடைத்த சந்தர்ப்பம் என்று கொடுப்பதையெல்லாம் பெற்றுக்கொண்டு பணத்துக்காகவும், பொருளுக்காகவும் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான் அந்தக் கன்னிப் பெண்ணின் நிலை என்ன? இதையே மறுபக்கம் திருப்பிப் பார்த்தால் வெளிநாடுகளில் பணிபுரியும் சகோதரர்கள் குழவி தன் கூட்டுக்கு மண் சேகரிப்பது போன்று பணம் சேகரிக்கும் தகப்பன்மார், இடியப்பம் விற்று பணம் சேர்க்கும் தாய்மார். இத்தனை சிக்கலுக்கு நடுவே வாழ்ந்து தன்னை மறைத்துக் கொண்டு வாழும் முஸ்லிம் கன்னியார்கள் எத்தனை!

திருமணம் என்றாலே தித்திக்கும் உறவு என்று சொல்வார்கள் ஆனால் அந்த நிலை மாறி பெண்ணைப் பெற்றவர்களின் உள்ளத்தில் கவலையும் கலக்கமும் அதிர்ச்சியும் தான் தோன்றுகின்றன இந்த நிலை மாற வேண்டும். எமது சமுதாயத்திலிருந்து போலியான சம்பிரதாயங்களும் சட்டங்களும் மாற்றப்பட வேண்டும். கன்னியர்களே! நீங்கள் உறுதி எடுத்தால் சமுதாயமென்ன உலகயே மாற்ற முடியும். என் வாழ்வில் சீதனம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற உறுதியுடன் வாழுங்கள். உங்களுக்கென்று ஒருவன் எங்காவது பிறந்திருப்பான். எத்தனை வருடம் சென்றாலும் பரவாயில்லை. அவன் என்னைத் தேடி வருவான் என்ற உறுதியான நம்பிக்கையுடன் சோர்ந்து போகாமல் காத்திருங்கள். அல்லாஹ்விடம் இருகரம் ஏந்துங்கள். உங்கள் எண்ணம் போல் வாழ்வமையும்.

**எம்.கே.கம்சியா**

## நாளும் ஒரு நபி மொழி

"அல்லாஹ்வின் துதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் நான் சூரிய கிரகணத் தொழுகையில் இருந்த போது எனக்கு நரகம் காட்டப்பட்டது. அதில் அதிகம் பேர் நிராகரிக்கும் பெண்களாகவே இருந்தனர். என்று கூறினார்கள். அப்போது இறைவனையா அவர்கள் நிராகரித்தார்கள் என்று கேட்க்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் கணவனை நிராகரிக்கிறார்கள். அதாவது அவன் செய்த உதவிகளை நிராகரிக்கிறார்கள். அவர்களில் ஒருத்திக்குக் காலம் முழுவதும் நீ நன்மைகளைச் செய்து கொண்டே இருந்து பின்னர் அவளுக்குப் பிடிக்காத ஒன்றை உன்னிடம் அவள் கண்டு விட்டாளானால் உன்னிடமிருந்து ஒரு போதும் நான் ஒரு நன்மையையும் கண்டதில்லை என்று பேசிவிடுவாள் என்றார்கள்".

*(அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் ரழி நுால்: புஹாரி -29)*

## *பெண்களுக்கு பர்தா அவசியந்தானா?*

செங்கல், கருங்கல், மாணிக்கக்கல் இவை யாவும் கற்களின் வகையைச் சேர்ந்தவையே! ஆனால் செங்கற்களும், கருங்கற்களும் பாதையில் கிடப்பதை நாம் காண்கின்றோம். ஆனால் மாணிக்கக் கல்லை பாதையில் நாம் பார்க்க முடியாது. அதை வெல்வெட் துணியில் மடித்து ஒரு பெட்டியில் மூடி இரும்புப் பெட்டியில் பாதுகாப்பாக வைப்பதைத்தான் நாம் காண்கிறோம் இதைப் போலவே ஆண்களும் மனித வர்க்கம்தான், பெண்களும் மனிதவர்க்கம்தான் ஆண்கள் மற்ற கற்களைப் போன்றவர்கள் அவர்கள் பர்தா அல்லாமல் எங்கும் திரியலாம் ஆனால் பெண்கள் மாணிக்கக்கற்களைப் போன்றவர்கள். எனவே அவர்கள் திரை மறைவில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மாணிக்கக் கற்றளைப் பாதுகாப்பாக வைக்காவிட்டால் அதைத் திருடர்கள் அபகரித்துக் கொள்வார்கள் இதைப் போலவே பெண்களைத் திரைமறைவாகப் பாதுகாக்காவிட்டால் ஷைத்தான் என்ற திருடன் அப் பெண்களை தவறான வழியில் செலுத்தி விடுவான். பெண்கள் பர்தா இல்லாமலும், பர்தாவுடனும் பேணுதல் இல்லாமல் அங்கும் இங்கும் செல்லுவதனால் பல் இன்னல்களுக்கு முகம் கொடுத்தார்கள்.



## பெண்களின் பெருமை

நாயாகம் (ஸல்) அவர்கள் நபியாகத் தேர்தெடுக்கப்பட்டவுடன் " நீங்கள் உண்மையிலேயே அல்லாஹ்வின் தூதர்தாம்" என்று கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் ஒரு பெண்தான். அவர்தான் கதீஜா நாயகி (ரலி) அவர்களாவார். இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக முதன்முதலாக உயிரைக் கொடுத்தவரும் ஒரு பெண்தான் அவர்தான் ஸுமையா(ரழி) அவர்கள். இப்படி பெண்ணின் பெருமைகளை செல்லிக்கொண்டே போலாம்.

அல்லாஹுதஆலா தன்னுடை திருமறையில் ஆண்களைப் பற்றி மட்டும் கூறவில்லை பெண்களைப் பற்றியும் பல இடங்களில் கூறி இருக்கிறான். " யார் நல்ல அமல் செய்வார்களோ அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி அவர் விசுவாசியாக இருந்தால் அவருக்கு நாம் மணமான வாழ்க்கையைக் கொடுப்போம்" என்றும் "நோன்பு நோற்கும் ஆண்கள், நோன்பு நோற்கும் பெண்கள், திர்க் செய்யும் பெண்கள் திர்க் செய்யும் ஆண்கள் தர்மம் செய்யும் ஆண்கள், தர்மம் செய்யும் பெண்கள்" என்றும்

எந்த ஆணும் எந்த ஆணையும் பரிகாசம் செய்யவேண்டாம் எந்த பெண்ணும் எந்த பெண்ணையும் பரிகாசம் செய்ய வேண்டாம் என்றும் "நல்ல ஆண்களுக்கு நல்ல பெண்களும் , கெட்ட ஆண்களுக்கு கெட்ட பெண்களும் என்று பெண்களைப் பற்றி திருமறையில் கூறப்படுகிறது. "நாங்கள் மக்கா நகரில் இருக்கும் பொழுது பெண்கள் மதிக்கப்படக் கூடியவர்கள் என்று கருதினோம்.

(மிகுதி அடுத்த வாரம்)



### *நபி(ஸல்) லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நல்லுரைகள்*
### *(தண்டனை பற்றியது)*

☞ தன்னுடைய உடலை அலங்கரித்து பிறருக்குக் காட்டித் திரிபவர்களை நெருப்புக் கத்திரியைக் கொண்டு துண்டிக் கப்படுவர்.

☞ புறம் பேசித் திரிந்தவள் தன்னுடைய சரீரத்தைக் கடித்து தின்று கொண்டிருப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாணத்தில் ...

பாடசாலையான சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் மாணவியான நொஸ்கானூர் முகமட் நிஹார் 189 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடத்தையும் மாகாணத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில் 3வது ஆண்டாகத் தொடர்ந்தும் சண்முகா இந்து மகளிர் கல்லூரி புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாம் இடத்தைப் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

## பேரம் பேசப்படும்..

காணிகளை அபகரித்து பொருளாதார அபிவிருத்தி வலயமாக அரசு போருக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் பிரகடனஞ்செய்ததை அடுத்து அப்பகுதியில் அனல் மின்நிலையப் பணிகளை அமைக்கும் ஒப்பந்தத்தை இந்திய அரசின் நீர்மின்வலுக் கூட்டுத்தாபனத்துடன் இலங்கையின் மின்சாரசபை மேற்கொண்டிருந்தது. எனினும் இறுதி ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்த போது வெப்பமாக்கும் வீதத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளால் இரு நாடுகளும் இழுபறி நிலையை எதிர்கொண்டிருந்தன.

அக்காலப்பகுதியில் மின் நிலையப் பணிகளை சீனாவிடம் கையளிக்கப்போவதாகவும் வதந்திகள் உலவின. ஏனெனில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்திருந்ததைத் தொடர்ந்தே இவ் வதந்திகள் உலா வரத் தொடங்கின.

தற்போது பந்து இந்தியாவின் பக்கம் இருக்கின்றது.

இந்திய பிரதமர் தற்போதுவரை பொதுநலவாய மாநாடு சம்பந்தமான இறுதி முடிவை எடுக்கத் தாமதிப்பதால் அக்காலப்பகுதியில் இந்தியா தனக்குச் சாதகமான ஒப்பந்தங்கள் யாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளத் தயாராகி வருவதாக தெரிகின்றது.

சம்பூர் மின்நிலைய ஒப்பந்தம் வரும் வாரத்தில் கைச்சாத்திடப்படும் என்றே மின்வலுத்துறை அமைச்சின் மேலதிகச் செயலாளர் தெரிவித்துள்ளார். அவ்வொப்பந்தத்தின் பின்னர் நிலக்கரி

## புல்மோட்டையில்...

குடியிருப்பை அமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக அக்காணிகளை “புல்டோசர்” என்ற இயந்திரத்தின் உதவியுடன் சமப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அவ்வாறு நடைபெறுவதை



## புதிதாய்ப் புத்தர் சிலைகள்...

“யுத்தத்தின் பின் இந்துக் கோயில்கள் உடைக்கப்பட்டமை, அவ்விடங்களில் புத்த விகாரை தாபிக்கப்பட்டமை ஆகிய இந்து மதத்தை அவமதிக்கும் செயற்பாடுகள் தங்களது திருகோணமலை மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன.

அரசாங்கத்தின் மதவிவகார பிரதியமைச்சர் உள்ள மாவட்டத்தில் இச்சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவது இந்துக்களின் மத உரிமைகளை திட்டமிட்டு பாதிக்கச் செய்யும் நடவடிக்கையாகவும் உள்ளது. தற்போது தனியார் காணியில் இடம்பெறவுள்ள புத்த விகாரை தாபிப்பை யாரும் அனுமதிக்க முடியாது.

கௌதம புத்த பகவானின் தர்ம உபதேசங்களை கொச்சைப்படுத்தும் விதத்தில் ஏனைய மத மக்களின் மனங்களை புண்படுத்தும் செயல்களை சில பௌத்த மத துறவிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே திருகோணமலை மாவட்டத்தின் அரச அதிபர் என்ற வகையில் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் 400 மீற்றருக்கு அப்பால் பௌத்த பிக்கு ஒருவரால் தனியார் காணியில் தாபிக்க உள்ள பௌத்த விகாரை செயற்பாட்டை தடுத்து நிறுத்துமாறு அன்பாக வேண்டுகின்றேன்“ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் மதவிவகார அமைச்சர், கிழக்கு மாகாண முதலமைச்சர், கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட பிரதேச செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மின்நிலையத்தை அமைக்கும் பணிக்காக சர்வதேச கேள்வியை மேற்கொள்ள வுள்ளதாகவும் தெரிவித்த அவர் அவ்வொப்பந்தத்தில் இலங்கைக்குப் பாதகமான விடயங்களான வெப்பமேற்றும் அளவு மற்றும் பராமரிப்புச் செலவுகள் தொடர்பான சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? என்ற கேள்விக்கு விடையளிக்க மறுத்துவிட்டார்.

தெரிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாகாணசபை உறுப்பினரும் மற்றும் பல சமய, மக்கள் தலைவர்களும் அவ்விடத்திற்குச் சென்று நிலைமைகளைக் கண்காணித்துள்ளனர். அதேவேளை நீதிமன்றத்திலுள்ள காணி விவகாரம் தொடர்பான வழக்கு 02.10 2013 அன்று குச்சவெளி நீதிமன்றத்தில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட போது மாவட்டச் செயலாளரின் சார்பில் மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தரும், பிரதேசச் செயலரின் சார்பில் உதவிப் பிரதேசச் செயலாளரும் முன்னிலைப் படுத்தப் பட்டிருந்தனர். அன்றும் போதிய ஆதாரங்

## தற்கொலையா.. கொலை..

இவ்விடயம் நடைபெற்றுள்ளது.

அவர் அவ்விடத்திலேயே வியாபாரமும் செய்து வந்த இருபத்தைந்து வயதான இளைஞன் இராமநாதன் தினேஸ்குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாக் கொண்ட இராமநாதன் தினேஸ்குமார் திருமலையில் உள்ள 293/1 இலக்கமுடைய சம்பந்தர் வீதியில் பழைய இரும்புக்கடை ஒன்றில் இரும்பு வியாபாரம் செய்து வந்துள்ளார்.

பெரிதாக வியாபாரமும் அவருக்குக் கைகொடுக்கவில்லை. கடன் வாங்கி கடையை நடாத்தி வந்துள்ளதாகவும். கடன் பிரச்சனை காரணமாக மனமுடைந்து அவர் இவ்வாறு தற்கொலை செய்திருக்கலாம் எனவும் அயலில் உள்ளோர்கள் தெரிவித்தனர்.

## ஐயனார்கேணி கொலை...

சமூகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் சர்வதேசக் காவல்துறை ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் திகதி இரவு 8.45 மணியளவில் திருகோணமலை நகரப் பிரதேசங்களில் ஒன்றான ஐயனார்கேணியில் வைத்து கேதீஸ்வரன் படுகொலை செய்யப் பட்டிருந்தார். அவர் தனது மனைவியின் வீட்டிலிருந்து வெளி வந்தபோதே கொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து துரித கதியில் விசாரணையில் இறங்கிய காவல்துறையினர் கொலை நடந்து சுமார் ஐம்பது நாட்களின் பின்னர் சந்தேக நபர்களாக இருவரைக் கைது செய்தனர்.

தேசிய, மற்றும் உள்ளூர் ஊடகங்கள் யாவற்றிலும் இக் கொலைக்கான சந்தேக நபராக கொல்லப்பட்ட கேதீஸ்வரனின் மனைவியின் பெயரும் சேர்க்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சந்தேக நபர்களைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் வருடம் ஒன்றின் பின்னரே சட்டப்படி கேதீஸ்வரனின் மனைவியின் பெயர் கொலைச் சந்தேக நபராகச் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

அதேவேளை இக் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டாவது சந்தேக நபரை நீதிமன்றம் சிறைக் காவலில் இருந்து பிணையில் விடுவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கேதீஸ்வரனின் குடும்பத்தாருடன் தொடர்புகொண்டு கேட்ட போது கொலைச் சந்தேகநபர் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பது தமக்கு இனம்புரியாத அச்சத்தையே ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளனர். எனினும் நேரடியான அச்சுறுத்தல்கள் ஏதும் விடுக்கப்பட்டதா? என வினவிய போது அவ்வாறு தற்போதுவரை விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர்கள் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் அவ்வாறான தொரு அச்சுறுத்தல் கைத்தொலைபேசி ஊடாக விடுக்கப்பட்டதாகவும் அவ்விடயத்தை தாம் காவல்துறையில் முறையிட்டதாகவும், அம்முறைப்பாடு தொடர்பான விசாரணைகளும் நடைபெற்றுவருவதாகவும் தெரிவித் துள்ளனர்.

## தனிநாயகம் அடிகளாரின்..

நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி · ஜெய்சங்கர், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சந்திரசேகரம், மலை முரசின் ஆசிரியர் மாயன் இரா.ஶ்ரீ ஞானேஸ்வரன் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன. மாலை நிகழ்வுகளில் யாழ் திருமறைக் கலாமன்ற மாணவிகளின் இரண்டு நாட்டியங்கள், திருமலை செல்வ இசை நடன சபா மாணவிகளின் நாட்டிய நாடகம், அருட்பணி அருள்வரதன் அடிகளாரின் தலைமையில் புனித மரியாள் கல்லூரி மாணவிகளின் கவியரங்கு, அருட்பணி மதுராங்கன் குரூஸ் அவர்களின் வாத்தியக் குழுவான -தமிழாழி- யின் இன்னிசை கானங்கள் என்பன நடந்தேறின. இம் மாலை நிகழ்வுகளின் இடையே தனிநாயகம் அடிகளாரின் நெருங்கிய உறிவினரான புலவர். அரியாநயகம் அவர்களின் வீறுகொண்ட தமிழ் உரை நிகழ்ச்சிக்கு வலுச் சேர்த்திருந்தது.

இவ்விழாவிற்கு திருகோணமலை வாழ்மக்களும் நிதியுதவி அளித்தாகவும் பண உதவிகள் உட்படப் பொருள் மற்றும் ஏனைய உதவிகளையும் அவர்கள் நல்கியதாகவும் விழாக்குழுவினர் தெரிவித்தனர் .

களைச் சமர்ப்பிக்க அரசு தரப்பு தவறியதால் இவ்வழக்கு எதிர்வரும் 06.11.2013 வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. அதேவேளை கடந்த 30ம் திகதி நடைபெற்ற மாகாண சபை அமர்வில் மாகாணசபை உறுப்பினர் அன்வர் அவர்களால் இவ்விடயம் தொடர்பாகப் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டு விவாதமும், அதனைத் தொடர்ந்து அமளி துமளியும் ஏற்பட்டது. இவ்விடயம் தொடர்பாக மாகாண சபையில் தமிழ்ப் பேசும் அனைவரும் கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து தமது எதிர்ப்பை வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

## வீட்டிற்குள் நுழைந்து . . .

வந்தவர் பொல் பாசாங்கு செய்து கடிதத்தை அந்த வயதான பெண்மணியிடம் கையளித்து விட்டுச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு ஓட்டம் எடுத்துள்ளார். அயல் வீட்டார் பெண்மணியின் ஓலக்குரலைக் கேட்டு வெளிவந்து பார்த்த போது ஓடியவரை அடையாளம் கண்டு கொண்டுள்ளனர்.

அதனடிப்படையில் அயல் வீடொன்றில் வசிக்கும் முச்சக்கர வண்டிச் சாரதியே அது எனத் தெரிந்நததால் காவல்துறையினர் அச் சாரதியை உரிய முறையில் விசாரித்த போது குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டதாகத் தெரிகின்றது.

## முன்னாள் அமைச்சரின்...

தெரிவித்துள்ளது.

. கரடியனாறு காவல்துறைப் பிரதேசத்திற்கு உட்பட்ட பதுளை- செங்கலடி வீதியிலுள்ள அவரது குடும்ப மயானத்திலேயே இத் தேடுதல் நடைபெறுகின்றது.

## நுண்கடனைக் கட்ட...

கடந்த 30.09.2013 அன்று நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்திலேயே இக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார். பாலியல் கையூட்டைக் கோருவதால் மீள் குடியேற்றப்பட்ட பெண்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்த அவர், இதனால் பெண்கள் தற்கொலைக்குத் தூண்டப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## சாரணர் பாசறை..

சாரணர் குழுவின் குழுச் சாரணத் தலைவர் சி.விவேகானந்தன் ஒழுங்கமைக் கப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் பெண் சாரணர்கள் உள்ளடங்கலாக எட்டு துருப்புகள் பங்குபற்றின. 7வது திருமலை சாரணர் குழு ௨013ன் சிறந்த துருப்பு, சிறந்த மாவட்ட சாரணர் ஒன்றுடல், வேலை வாரம் முதலிடம், சமூக சேவை முதலிடம், மைதான காட்சி இரண்டாமிடம், சிறந்த சாரணத் தலைவர் குறிப்பு புத்தகம் முதலிடம், சிறந்த சாரணர் குறிப்பு புத்தகம் மூன்றாமிடம் ஆகியவற்றை பெற்றுள் ளார்கள். திருகோணமலை சாரணர் வரலாற்றில் தொடர்ச்சியாக 4வது தடவையாக சிறந்த துருப்பு, சிறந்த மாவட்ட சாரணர் ஒன்றுகூடல் ஆகியவற்றுக்கான வெற்றி கோப்பைகளை பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலையா? கொலையா?



தற்கொலை எனச் செய்தி வெளியாகியதைத் தொடர்ந்து அங்கு சென்ற போது தற்கொலை செய்து கொண்டவரின் கால்கள் நிலத்திலிருந்து சில அங்குலங்களுக்கு மேலாகத் தொங்கியதால் அதைத் தற்கொலை என நம்ப முடியாதிருந்ததாகச் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் திருஞானசம்பந்தர் வீதியிலுள்ள வீடொன்றில் நடந்

# வீட்டிற்குள் நுழைந்து துணிகரக் கொள்ளை சாரதா வீதியில் சம்பவம்





திருகோணமலையில் முச்சக்கர வாகனத்தில் வந்து வீட்டிற்குள் நுழைந்து 74 வயதான மூதாட்டியின் ௨ ½ பவுன் தங்க சங்கிலியை அறுத்துத் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று நடந்தேறியுள்ளது.

30.09.௨013 திங்களன்று காலை ௯ மணியளவில் திருமலை சாரதா வீதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியையான குணநாயகம் சாந்தாதேவி (வயது 74) என்பவரது வீட்டிற்குள் தபாற்காரர் கொண்டு வந்த கடிதத்தினை அவரது உறவினர் எனக்கூறி வாங்கி வீட்டிற்குள் நுழைந்த அந்த நபர் அவரை அழைத்து கடிதம் கொண்டு

15

# ஒலுவிலில் வள்ளத் தொழிற்சாலை

ஒலுவில் மீன்பிடி துறைமுகம் அண்மையில் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து பாலமுனையில் மீன்பிடி வள்ளங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது. ஒலுவில் துறைமுகத்தை பார்வையிட வரும் பொதுமக்கள் இதனையும் பார்வையிட்டு வருகின்றனர். (எம்.பைஷல் இஸ்மாயில்)



# திருகோணமலையில் ஆயிரக்கணக்கான மக்களுடன் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா



திருகோணமலையில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் ஆயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது.

கடந்த ௨8ம் திகதி சனிக்கிழமை திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுகள் காலை மாலை என இரு அமர்வுகளாக நடாத்தப்பட்டன. காலை அமர்வுகள் கருத்தரங்ககளாகவும் மாலை அமர்வுகள் கலை நிகழ்ச்சிகளாகவும் நடைபெற்ற போது அயிரக்கணக்கான திருமலை வாழ் மக்கள் அணி திரண்டு இவ் விழாவில் கலந்த சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

அரங்கம் நிறைந்த மக்கட் தொகையால் பலர் நின்று கொண்டே நிகழ்ச்சிகளைப் பார்த்ததைக் காண முடிந்தது. காலை அமர்வுகளில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் விசாகரூபன், கிழக்குப்பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ், கிழக்குப் பல்கலைக்கழக

15



# சாரணர் பாசறை

திருகோணமலையில் நடைபெற்ற ௨013ம் ஆண்டுக்கான மாவட்ட சாரணர் ஒன்றுகூடல் கடந்த ௨0, ௨1, ௨௨ம் திகதிகளில் தி-புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்றது.

இதனை 7வது திருமலை

15



# திருமலை மாவட்ட இறையிரக்கத் திருத்தலத்தின் அபிஷேகமும், புனித பவுஸ்தினாவின் திருவிழாவும்

செ.ஜேம்ஸ் ரிச்சட்சன்

திருகோணமலையில் இருந்து ஆறு கிலோமீட்டர்களுக்கு அப்பால் நிலாவெளி வீதியில் அலஸ்தோட்டதுக்கு நடுவே வீதி ஒரு புறம் காடு ஒரு புறம் கடலும் வீடுகளும் மறுபுறம் என அமைந்திருந்தது ஒரு இடம். இந்த இடத்தில் வாழும் மக்களின் ஆன்மீக தேவையை அறிந்த திருகோணமலை மட்டகளப்பு மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார் காடாய் கிடந்த இந்த இடத்தை பார்வையிட்டார்.

2001 இன் ஆரம்ப காலத்தில் கையில் ஒரு குடையும் தோளில் ஒரு கைப்பையுமாக அருட்பணி டு.பிலிப் அவர்களின் வருகை ஒரு புதிய ஆரம்பத்திற்கு வித்திடுவதாய் அமைந்தது. அவர் பல சிரமங்களுக்கு மத்தியில் ஒரு சிற்றாலயம் அமைக்கப்பட்டு இறை இரக்க ஆண்டவருக்கென 05.10.2001 அன்று அர்ப்பணிக்கப்பட்டது. ஆலயமாக மட்டுமன்றி ஒரு ஆரம்ப பாடசாலையாக செயற்படும் நோக்கத்துடனும் அமைக்கப்பட்டது. யுத்தம் நடைபெற்று கொண்டிருந்த காலத்தில் "யேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்" என்ற புனித பவுஸ்தினாவின் வார்த்தைகள் மக்களுக்கு பெரும் ஆறுதலாய் இருந்தது.



2002 மாசி மாதத்தில் இச்சிற்றாலயம் இறை இரக்க திருத்தலமாக பெயர் சூடப்பட்டது. ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இரண்டு வருடங்களாக திருவிழா திருப்பலி பிற்பகல் 3 மணிக்கே ஒப்புக் கொடுக்கப்பட்டது. 2003ம் ஆண்டு திருவிழா திருப்பலியுடன் அருட்தந்தை பிலிப் விடைபெற்று செல்ல அருட்பணி



க்ரைட்டன் அவுட்ஸ்கோன் அவர்கள் ஆலயத்தை பொறுப்பேற்றுகொண்டார்.

இந்த பகுதி இறை மக்களை ஒன்றிணைப்பதில் இவரும், இவருக்குப் பின் பொறுப்பேற்ற அருட்பணி லியோ அடிகளாரும் பெரும் பங்காற்றினர். தொடர்ந்து 2006இல் அருட்பணி ரமேஸ் கிறிஸ்டி அவர்கள் ஆலயத்தினை பொறுப் பேற்றுக்கொண்டார். இவரே இங்கு முதன் முதலில் பரிசுத்த ஆவிக்குரிய கூட்டத்தை நடத்த ஆரம்பித்தவர் ஆவார். மேலும் இன்றைய இந்த புதிய திருத்தலத்தின் கட்டுமான பணிகளை ஆரம்பித்து வைத்தவரும் [illegible] தொடர்ந்து [illegible] அவர்கள் ஆலயத்தினை பொறுப்பேற்றுக்கொண்டார். தொடர்ந்து ஆலய கட்டுமான பணிகளை ஊக்குவித்து, நடத்திய இவர் 2011 அக்டோபர் இல் அருட்பணி திருச்செல்வம் அவர்களிடம் ஆலய, கட்டுமான பணிகளை ஒப்படைத்து விட்டு விடைபெற்று சென்றார். இன்னும் சிறப்பாக 2011ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ம் நாள் தனிப்பங்காக இப்பங்கினை பிரகடனப்படுத்தி அருட்பணி திருசெல்வம் அடிகளார் பொறுப் பேற்றார். அன்று தொடக்கம் இன்று வரை அவரது முயற்சியாலும் மக்களின் ஒத்துழைப்பாலும் இந்த ஆலயம் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ளது.

"சுமை சுமந்து சோர்ந்திருப் போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் உங்களை நான் இளைப்பாறச்செய்வேன். நான் மன தாழ்ச்சியும் சாந்தமும் உடையவன்" என்ற இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இன மத வேறுபாடின்றி வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு நடைபெறும் குணமளிக்கும் ஆராதனையில் பங்குகொண்டு பல நோயாளிகள் குணமடைந்து செல்கிறார்கள். இறை இரக்க ஆண்டவரில் நம்பிக்கை கொண்ட மக்களில் அவருடைய அற்புதத்தை பெற்றவர்கள் ஏராளம். இத்திருத்தலத்தில் இரண்டு திருவிழாக்களை கொண்டாடுகிறார்கள். ஒன்று ஈஸ்டருக்கு அடுத்து வரும் ஞாயிறு இறைஇரக்க ஆண்டவரின் பெருவிழாவும் மற்றையது இறைஇரக்க ஆண்டவர் புனித பவுஸ்தினாவுக்கும் காட்சி கொடுத்து தனது இரக்கத்தை



பரப்பச்சொன்னார், அந்த புனிதை இறந்த நாளான ஐப்பசி 5ம் திகதி இரண்டாவது பெருவிழாவும் நடைபெறுகிறது.

அன்றைய நாளில் திருகோணமலை மறை மாநில ஆயர் அவர்களால் இவ்வாலயத்தை அர்ச்சித்து புனிதப்படுத்தப்படுவது மறைமாவட்டத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் பெருமகிழ்ச்சி அளிக்கிறது.



அருட்பணி. திருச்செல்வம் அடிகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org